ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

31.03.2010 - மலர் 07, இதழ் 04



## நேரம் கணிப்பிடப்படும் முறை

## அதிசய மிருகம் கங்காரு

## சைக்கிள் உருவான வரலாறு

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பலம் பெற்ற நிலமேக்கள்

சார்ஜன்ட் மிரொஜ் என்பவர்தான் பரிசில்களைக் கொண்டு சென்றவர். அப்பரிசில்களுடன் செய்தி ஓலை ஒன்றும் இருந்தது. அவர்கள் கண்டிக்குச் சென்றபின் அந்த செய்தி ஓலையை வெள்ளித் தட்டில் வைத்து நால்வர் அதனை எடுத்துச் சென்றனர். இந்த ஓலையை இரண்டாம் இராஜசிங்க மன்னன் படித்தபின் நட்புறவோடு காலத்தைக் கழிக்க தனது விருப்பத்தைத் தெரிவித்தான். இதற்கிடையில், ஏழு கோரளைகளின் திசாவை கறுவா பயிர்ச் செய்கைக்கு பெரும் இடையூறுகளை விளைவித்தான். அதனால், அந்த சமாதான எண்ணம் தடைப்பட்டது.

முதுமையடைந்த இரண்டாம் இராஜசிங்க மன்னன் இச்சந்தர்ப்பத்தில் அபின் உண்ணும் பழக்கத்தைக் கொண்டுள்ளான் என்றும் தமக்கெதிரான செயல்பாடுகள் அனைத்தும் தமக்கு எதிரான நிலமேக்களின் செயல்கள் என்றும் ஒல்லாந்தருக்கு செய்தி எட்டியது. அதுமாத்திரமல்ல அரச மாளிகைக்கு வரும் தூதுவர்களை மன்னன் சந்திப்பதைத் தடுப்பதும் அவர்கள் செயல்தான் என்பதையும் அறிந்துகொண்டனர்.

இதற்கிடையில், பத்தேவியாவில் இருந்து நட்புடன் எழுதப்பட்ட கடிதத்தை எடுத்துக் கொண்டு மன்னனிடம் வந்த தூதுவரின் கதியும் இதற்கு முன் மன்னனைப் பார்க்கச் சென்ற தூதுவர்களுக்கு ஏற்பட்ட அதே கதிதான் ஏற்பட்டது. அத்தூதுவரும் முன்னர் நடந்தது போலவே தடுத்து வைக்கப்பட்டார்.

இந்நாட்களில் ஒல்லாந்த வர்த்தக சங்கம் வருமானத்தை பெறும் நிலங்களுக்கு நிலமேக்கள் பெரும் நட்டத்தை விளைவித்தனர். நகர எல்லைகளின் காவலரண்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த படைத் தளபதிகளுக்கு அவ்விடங்களை உடனடியாகத் தமக்குக் கையளித்து விட்டு செல்லும்படி அவர்கள் கடிதம் அனுப்பினர்.

ஆனால், ஒல்லாந்தர்களோ யுத்தம் ஒன்று ஏற்படும் சந்தர்ப்பத்தை தவிர்த்து காலத்தைக் கழித்தனர். அப்பொழுது மன்னனுக்கு கைய ளிக்கக் கொண்டு சென்ற பரிசுகள் சீதாவாக்கையில் இருந்தன. அவற்றை மன்னன் பெற்றுக்கொள்ள விருப்பமுடன் இருக்கிறான் என மிரொஜ் தலைநகருக்குத் தெரிவித்தான். அதன்பின் எண்ணூறு படையினருடன் அடெம் செலட் எனும் தளபதி பரிசில்களை எடுத்துக் கொண்டு கண்டிக்குச் சென்றான். பெரும் எண்ணிக்கையிலான நிலமேக்கள் கூடி இருப்பதாக அவர்களுக்கு வழியில் தகவல்கள் கிடைத்தன. இதனால், அப்பயணம் இடைநிறுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அடுத்த வருடத்திலிருந்து

# தரம் 6-11 மாணவர்கள் ஒரு பாடத்தை ஆங்கிலத்தில் கற்க வேண்டும்

எதிர்வரும் வருடத்திலிருந்து சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் தரம் 6 இல் இருந்து தரம் 11 வரையிலான மாணவர்கள் ஆங்கிலப் பாடத்திற்கு மேலதிகமாக இன்னுமொரு பாடத்தை கட்டாயம் ஆங்கிலத்தில் கற்கவேண்டும் என தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிமல் சேதர தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்கி லேயே இந்த திட்டம் நடைமுறைப்படுத் தப்படுவதாகக் கூறிய அவர், இதற்குத் தேவைப்படும் ஆசிரியர்களை பணியில் அமர்த்துவது குறித்து தற்போதளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித் துள்ளார்.

மாணவர்கள் ஆங்கில மொழி மூலத்தில் கற்க விரும்புகின்ற பாடங் களைத் தெரிவு செய்யும்போது இலகுவான பாடத்தை தெரிவு செய்வதற்கு இடமளிப்பதாகவும் கணிதம், விஞ்ஞானம்,வரலாறு போன்ற கடினமான பாடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# உ/தர, சா/தர மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டை

இவ்வருடம் நடைபெறவுள்ள க.பொ.த உ/தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 16 வயதுக்கு மேற் பட்ட பாடசாலை மாணவர்களுக் கான தேசிய அடையாளஅட்டை யைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஏ.ஜீ.தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வருடத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவ தற்கு எதிர்பார்த்திருக் கும் 16 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக் கான தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளும்



மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும், அதற்காக அதிபர் களினால் அத்தாட் சிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் ஒக்டோபர் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பங்களை சமர்ப்பித்து இரண்டு வாரங்களுக்குள் மாணவர் களுக்கு தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்ற இருக்கின்ற தனியார் விண்ணப்பதாரிகள் பொது வான விதிமுறையினடிப்படையில் கிராம உத்தியோகத்தரினூடாக விண்ணப் பங்களை சமர்ப்பித்து தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள லாம் எனவும் தெரி விக்கப்படுகின்றது.

கடந்த வருடங் களில் விண்ணப் பங்களை உரிய நேரத்தில் சமர்ப் பிக்காதமையினால் பரீட்சைக்குத் தோற்றிய அநேக மான மாணவர்கள் பெரும் சிரமங் களுக்கு ஆளாகிய மையைக் கவனத் தில் கொண்டு, இந்த வருடத்திலி ருந்து புதிய திட் டங்கள் செயற் படுத்தப்பட்டுள் ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.



# க.பொ.த சா/தர பெறுபேறு ஏப்ரலில் வெளியிடப்படும்

2009 க.பொ.த சாதாரண தரப் பரீட் சைக்கான பெறுபேறு களை ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரம ளவில் வெளியிடக்கூடியதாக இருக் கும் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த பரீட்சையின் அழகியல் பாடங்களுக்கு அமைவான செய் முறைப் பரீட்சைகள் கடந்த 9 ஆம் திகதி நிறைவடைந்ததோடு, தற்போதளவில் பரீட்சைப் பெறுபேறுகள் தயாராகிக்கொண்டு இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# எரிபொருளாக மாறும் 'ப்ளாஸ்டிக்'

உலகில் நாள்தோறும் சேரும் கழிவுகளில் அதிக அளவு ப்ளாஸ்டிக் கழிவுகளும் சேர்கின்றன.

இந்த நிலையில்,கழிவாக சேர்கின்ற ப்ளாஸ்டிக்கை பயன்பாட்டுக்கு உகந் தவாறு மீள்சுழற்சி செய்யலாம் என்று அண்மை யில் அமெரிக்க நிறுவன மொன்றினால் கண்டறியப்பட் டுள்ளது. ஏராளமாக குவியும் இந்த கழிவுகளை பெட்ரோல், டீசல் போன்ற ஒரு மாற்று எரிபொரு ளாக மாற்றிவிடலாம் என்பதுதான் அந்த புதிய கண்டுபிடிப்பு. இந்த முறையின்படி ஒரு தொன் ப்ளாஸ்டிக் கழிவில் இருந்து 3 முதல் 5 பீப்பாய் எரிபொருளை தயாரிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனை வாகனங்களுக்கான எரிபொருளாக பயன்படுத்தலாம் என்றும் கூறப்படுகின்றது. தற்போத ளவில் இந்த கண்டுபிடிப்புடன் தொடர்பான பரீட்சார்த்த நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் வாகனங்களுக்கான எரிபொருளாக உலகளவில் இது பயன்படுத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.





Vijey විජය
விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பல்கலைக்கழக அனுமதியாளர்களின் பெயர்ப்பட்டியல் மே மாதத்தில்...

இவ்வருடத்தில் பல்கலைக்கழகங் களுக்கு அனுமதித்துக்கொள்ளப்படு கின்ற மாணவர்களின் பெயர்ப்பட் டியல் எதிர்வரும் மே மாதம் வெளி யிடப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உப தலைவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க வேண்டிய கால எல்லை கடந்த 26 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றுள்ளது.

இம்முறை பல்கலைக்கழக அனு மதிக்காக 50,000 விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும், விண்ணப் பித்தவர்களில் 21,000 பேர் பல்கலைக்கழகங்களுக்கு அனும தித்துக்கொள்ளப்பட உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள் ளார்.




30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20ரூ பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் உருவானது எப்படி?

**இன்றுள்ள நவீன வாகனங்கள் உருவாக்கப்படுவதற்கு முன்னர் மனிதனால் சைக்கிள்களே முதன்முதலில் உருவாக்கப்பட்டன. 1816 ஆம் ஆண்டிலிருந்து சைக்கிள் உலகம் முழுவதும் பாவனைக்கு வந்தது. உலகில் உருவான முதல் சைக்கிளில் இருந்து 20 ஆம் நூற்றாண்டு வரை காலத்துக்குக் காலம் மாற்றங்களுக்குள்ளாகிய சைக்கிள்களைப் பற்றி இங்கு ஆராய்வோம்**





பெரக் வொன் டைக்

## நடமாடும் இயந்திரம் (The Walking Machine)

பெரன்வொன்ட்ரய்ஸ் என்பவராலேயே முதன்முதலில் சைக்கிள் 1817 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பெரன்வொன்ட்ரய்ஸ் அவர்கள் அரச பூங்காவில் வேகமாக அங்குமிங்கும் போய் வருவதற்கேற்ற போக்குவரத்துப் பாவனைக்காகவே அவரால் சைக்கிள் உருவாக்கப்பட்டது. அதில் இரு சம அளவு சக்கரங்கள் காணப்பட்டன. முன் சக்கரத்தால் அங்குமிங்கும் திருப்ப முடிந்தது. இரு சக்கரங்களும் இணைக்கப்பட்டிருந்ததால் இதில் அமர்வோர் இரு கால்களையும் இரு பக்கங்களிலும் வைத்துக்கொண்டு இதனைத் தள்ளுவதன் மூலமே அது இயங்கியது. இந்த நடமாடும் இயந்திரம் மரப் பலகையாலேயே முதன்முதலாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

## முட்கம்பிகள் சுழலும் இயந்திரம் (The Velocipede or Boneshaker)

1865 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இந்த இயந்திரம் முன்கூறப்பட்ட நடமாடும் இயந்திரத்தின் புதுவடிவமாகும். இதன் முன்பக்கச் சக்கரத்தில் கால் பதிக்க கம்பி ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. இது 'முட்கம்பிகள் சுழலும் இயந்திரம்' என்று அழைக்கப்பட்டது. பின்னர் இதில் இருக்கும் கால் பதிக்கும் பகுதி மரப்பலகையால் தயாரிக்கப்பட்டது. பிற்காலத்தில் உலோகத்தாலும் இறப்பராலும் அது அமைக்கப்பட்டது. அக்காலத்தில் சிறுவீதிகள் சிறிய சுற்றுக் கற்கள் பதிக்கப்பட்டே அமைக்கப்பட்டிருந்தன. அதனால், 'பெடலை' மிதித்துக்கொண்டு வீதியில் ஓட்டுவது சிரமமாக இருந்தது.


இறுக்கமான டயருள்ள பாதுகாப்பான சைக்கிள்


நியூமெடிக் டயருடைய பாதுகாப்பான சைக்கிள்

## உயர சக்கர சைக்கிள் (The High wheel Bicycle)

1870 ஆம் ஆண்டே முழுவதும் உலோகத்தால் தயாரிக்கப்பட்ட சைக்கிள் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னர் காணப்பட்ட சைக்கிள்களைப் போலவே இதன் முன்பக்கச் சக்கரத்தில் கால் வைக்கும் பகுதி இருந்தது. எனினும், இதில் பிறிவீல் இயந்திர முறை காணப்படவில்லை. முழுவதும் றப்பராலேயே சக்கரங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. நீண்ட 'ஸ்கோப்' கம்பி இதன் முன்பக்க சக்கரத்தில் பொருத்தப்பட்டிருந்ததால் முந்தைய சைக்கிளைவிட இதை எளிதாக ஓட்டினர். இதனை செலுத்துவோர் ஒருமுறை செலுத்துகையில் இயந்திரம் அதிக தூரம் செல்லும் என்று எண்ணியதாலேயே சைக்கிள் தயாரிப்பாளர்கள் இதன் முன்பக்க சக்கரத்தை பெரிதாக உருவாக்கினர்.

## இரு உயர்சக்கர முச்சக்கர சைக்கிள் (The High-Wheel Tricycle)

இது பெண்களுக்காகத் தயாரிக்கப்பட்ட சைக்கிளாகும். ஆண்கள் உயரமான இரு சக்கரங்களுள்ள சைக்கிளில் பயணிப்பது போல் பெண்கள் நீண்ட கால் வரையுள்ள ஆடையுடனோ, புடைவை அணிந்தோ அதில் பயணிக்க முடியாதிருந்தது. ஆதலால் அவர்கள் எளிதாகப் பயணிக்கும் வகையில் இந்த முச்சக்கர சைக்கிள் உருவாக்கப்பட்டது. இதில் ஏறி வசதியாகப் பயணிக்க முடியும். பெண்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இந்த சைக்கிளில் அக்காலத்தில் வைத்தியர்களும் மதகுருமார்களும்கூட பயணம் செய்தனர். தற்போது பாவனையிலுள்ள கார்களின் நவீன இயந்திர வடிவமும்கூட அன்றைய முச்சக்கர சைக்கிளுக்கென உருவாக்கப்பட்ட ஆரம்ப வடிவத்தின் பரிணாம மாற்றமேயாகும். அவற்றில் சில பின்வருமாறு;

1. ரெக் என்ட் பினியன் ஸ்டியரிங் (Rack and Pinion Steering)
2. டிபரன்ஷல் (The Differential)
3. பேன்ட் பிரேக்ஸ் (Band Brakes)

## உயர சக்கர பாதுகாப்பு சைக்கிள் (The High-Wheel Safety)

இவ்வாறாக சைக்கிள் பல்வேறு வகைகளில் அமைந்தன. புதுவடிவம் பெறுகையில் முன் சக்கரம் சிறியதாகச் செய்யப்பட்ட சைக்கிள்கள் முதலிடம் பெற்றது. இது உயரமான சக்கரங்களைக் கொண்டிருப்பினும், பாதுகாப்பான சைக்கிள் எனும் பாராட்டைப் பெற்றது.

## டயர் சக்கர பாதுகாப்பு சைக்கிள் (The Hard-Tyred Safety)

உலோக வடிவ முன்னேற்றத்தோடு சைக்கிள் புதுவடிவங்களில் தயாரிக்கப்பட்டன. பாரமற்ற சங்கிலி ஸ்கொபட் ஆகியவை வலுவான உலோகத்தால் தயாரிக்கப்பட்டன. ஆரம்பகால இரு சக்கர சம அளவு சைக்கிள்களே நவீன வடிவத்துக்குரிய சைக்கிள்களாகக் கருதப்படுகின்றன. சிறிய சக்கரங்களாக இருந்தபோதும் ஒருமுறை பாதங்களால் அழுத்தினால் முன்பிருந்த பெரிய சக்கர வேகத்தை இது பெற்றுவிடும் என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும்.


உயரமான சக்கரமுள்ள முச்சக்கரவண்டி


## பாதுகாப்பான நியூமெடிக் டயருடைய சைக்கிள் (The Pneumatic Tyred Safety)

அயர்லாந்து வைத்தியர் டன்லொப் என்பவரே முதன்முதலில் காற்றடைக்கப்பட்ட டயரை உபயோகித்து சைக்கிளைத் தயாரித்தவராவார். இவர் தனது மகனின் பயணத்தை எளிதாக்கவே அவ்விதம் செய்தார். இத்தொழில்நுட்பத்தால் சைக்கிள் மேலும் புகழடைந்தது. விலையும் குறைவடைந்து தரமும் கூடியது. சந்தையிலும் அதன் விற்பனை அதிகரித்தது.எனினும், 1898 ஆம் வருடம் யேல் எனும் புதுவகை சைக்கிள் துருப்பிடிக்காத சங்கிலியுடன் அமைந்ததால் ஓட்டுவதற்கு இலகுவாயிற்று. 1880 முதல் 1890 வரை சைக்கிள் பயணம் மதிப்பு பெற்றிருந்தன.



**ஏ.ஜே.எம்.நிழாம்**


உயரமான சக்கரமுள்ள பாதுகாப்பான சைக்கிள்


உயரமான சக்கரமுள்ள சைக்கிள்


வெலொன்சிபிட் இயந்திரம்


நடமாடும் இயந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விஜய் வாழ்த்துப் பூங்கா

கடந்து வந்த வருடந்தோறும்
அறிவைப் பெருக்க உதவியதோடு,
கருத்துக்கினிய வழிகள் சொன்னாய்.
அவைதனை இங்கெழுதிட முடியாது - நீ
பல்லாண்டு பணி செய்ய
வேண்டுகின்றோம்! வாழ்த்துகின்றோம்!
ஷபீஹா ஷேக், அஷீம் ஷேக்,
ப/அல்-பதுரியா மு.ம.வித்., தியத்தலாவ

வாரந்தோறும்
உன்னிடம் இருந்து
பல அறிவுசார்
விடயங்களை நான்
பெற்றுக்கொள்கின்றேன்.
ஏ.எம்.பஸ்னா,
தரம்-10$^{B}$,
நாச்சியாதீவு மு.ம.வித்.,
அநுராதபுரம்.

நீ வடிக்கின்ற
அனைத்து
ஆக்கங்களையும் உறிஞ்சிக்
குடிக்கின்றேன். ஒவ்வொரு
வாரமும் என் அறிவுக்குத்
தீனியாக இருக்கின்றாய்.
ஹிமாஸா வாஹிட், தரம்-8$^{D}$,
அல்-முபாரக் ம.ம.வித்.,
மல்வானை.

அறிவுச் சுடராய்
வாசகர்கள் மனதில் முழுதாய் நின்று
அறிவு புகட்டும் விஜய்யே!
உந்தன் புகழ்
சிறந்தோங்கட்டும் இவ்வையகம்
முழுவதும்...
எஃப்.அஷ்கா, தரம்-9,
பதிபியா மு.ம.வித்.,
மடுல்போவ.

நாடளாவிய
ரீதியில் அறிவுசார்
பத்திரிகைகளில் முதலிடம்
வகித்து மகுட மணியைத்
தரித்துள்ளாய். நீ மென்மேலும்
வளர்வதற்கு எனது
வாழ்த்துக்கள்!
வே.சரண்யா, தரம்-11,
கவரவில த.ம.வித்.,
சாமிமலை.

நீ மாணவர்களுக்கு
களம் கொடுத்து,
வாழ்வில் வளம்
சேர்த்தாய்.
எம்.றைசூல்,
தரம்-12,
ஸாஹிரா தே.பா.,
புத்தளம்.

அதிசயத் தகவல்களுடன்
எம்மைத் தீண்டும் அரிய நூலகமாய்
உள்ள நீ, பல்லாண்டு காலம்
நிலைத்திருக்க வாழ்த்துகிறேன்.
எஸ்.எச்.ஆபிதா, உயர் தரம்,
ஹொலி றொஸரி த.ம.வித்.,
பொகவந்தலாவை.

விந்தைகள் மிகுந்த
உலகத்தில்
புதன்தோறும் விசித்திரமாய்
தோன்றி எம் அறிவை
வளர்த்திடுவாய்.
சர்வ் நிறுவனத்தின்
ஆசிரியர்கள் மற்றும்
மாணவர்கள்,
பாணந்துறை.

ஏராளமான தகவல்களை
வாராவாரம் அள்ளித்தந்து, குறுகிய
காலத்தில் இலங்கையின் எட்டுத் திசைகளையும்
எட்டிவிட்டாய்.
நு/அக்கரபத்தனை த.ம.வித்.,
தரம்-12$^{(கலை)}$ மாணவர்கள்.

தமிழ் பேசும் பிள்ளைகளுக்காக வெளிவரும்
ஒரே அறிவுசார் பத்திரிகையான விஜய்,
மேலும் பல ஆக்கங்களையும் புதிய
படைப்புக்களையும் தாங்கி வரவேண்டும்
என வாழ்த்துகின்றேன்.
க.அபிராமி, தரம்-6$^{B}$,
வேம்படி ம.உ/தர பாட., யாழ்ப்பாணம்.

எம் அறிவுப் பசிக்கு
வண்ணமயமான உன்
பக்கங்கள்
இருபத்துநான்கில்
இருந்தும் நிறைந்த
அறிவினைப்
பெறுகின்றோம்.
மேரி தேனுஜா,
சித்தி விநாயகர் இ.கல்.,
மன்னார்.

இலங்கையில் வெளிவரும்
மாணவர்களுக்கான தமிழ் பத்திரிகைகளில்
முதலிடம் வகிக்கின்ற விஜய்யே!
உன் ஆக்கங்கள் அனைத்தும் எம் அறிவை விருத்தி
செய்கின்றன.
எம்.நத்ஹா, கல்முனை-13.

அறிவுக்கு விருந்தாக
அவனிதனில் வந்துதித்த
விஜய்க்கு ஆயிரம் கோடி
வாழ்த்துக்கள்.
எம்.என்.எம்.மில்ஹான்,
ஹிஃப்ல் பிரிவு,
அல்-உஸ்வதுல் ஹஸனாஹ்
அர.கல்.,பானகமுவ.

சின்னஞ் சிறார்களின்
சிந்தனைக்கு
சிறந்த களமாய் திகழும்
'விஜய்' சஞ்சிகைக்கு எனது
வாழ்த்துக்கள்.
எஃப்.நிஷாதா, தரம்-7$^{A}$,
பாத்திமா பா.ம.வித்.,
புத்தளம்.

அறிவைத் தேடும் உலகில்
உன் புகழ் ஓங்கி ஒலிப்பதுதான்
உனது தனித்துவம்.
தனுஷிகா குமாரி,
க/அம்பாக்கோட்டை த.வித்., கெங்கல்ல.

புதன்தோறும் புத்தம் புதிய
தகவல்களை அள்ளி
வழங்கும் விஜய்யின்
ஆயுள் நூற்றாண்டுகளாக
நிலைக்க
வாழ்த்துகின்றோம்.
மஸ்கூர் இஜாஸ், மனாஸீர்,
இப்றாஸ், இன்பாஸ்,
நெய்தல் நகர், மூதூர்-01.

ஏழாண்டுகள்
எம் கரத்தில் தவழ்ந்தாய்!
எத்தனையோ விடயங்களை
எமக்காக அளித்தாய்!
உன் சேவை நிலைத்திடவே
பல்லாண்டு வாழ்ந்திடுவீர்!
அ.அஜிதா, தரம்-9$^{A}$,
நெ.ம.ம.வித்.,
யாழ்ப்பாணம்.

6ஆம் வயதை
இனிதாய் பூர்த்தி
செய்திருக்கிறாய். நீ
நூற்றாண்டு விழா
தாண்டியும்
விரையவேண்டும்.
உன்னால் தொடர்ந்தும் நாம்
அறிவு பெறவேண்டும்.
ஜுயியற் சங்கீதா,
புளியங்குளம்,
வவுனியா.

## அன்பின் வாசகர்களுக்கு...

வாழ்த்துப் பூங்கா பகுதிக்காக வாழ்த்துக்களை அனுப்பி வைத்த அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஏராளமான வாழ்த்துக்கள் வந்து சேர்ந்த போதும், அவை அனைத்தையும் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். இன்றுபோல் என்றும் எம்முடன் இணைந்திருங்கள்.

அன்புடன்,
விஜய்.

## சான்றோர் சொன்னவை



* உன்னைத் தாழ்த்திப் பேசும்போது ஊமையாக இரு; உயர்த்திப் பேசும்போது செவிடனாக இரு; வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய் - விவேகானந்தர்.
* வாழ்வில் ஜெயிக்க நண்பன் தேவை. ஆனால், வாழ்நாள் முழுவதும் ஜெயிக்க எதிரி தேவை - மாவீரர் அலெக்சாண்டர்.
* அதிகமாகச் சிரிக்கும் மனிதன் தன் மனதில் மிகப்பெரிய காயத்தை வைத்திருப்பான் - சார்லி சப்ளின்.
* உண்மையே பேசு; அது உன் வார்த்தைகளைப் பாதுகாக்கும். கலந்து யோசனை செய்; அது உன் சிந்தனையை வளமாக்கும் - மகாத்மா காந்தி.
* வெற்றியைத் தேடி நீ போக வேண்டியது இல்லை. வெற்றி என்பது நீ வெளிச்சத்தை நோக்கி நடக்கும்போது நிழல்போல உன்கூடவே வரும் - அப்துல் கலாம்.





தி/கிண்ணியா மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எஃப். மொமீனா, 2009 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர், அஊபர்-றபீனா தம்பதியரின் புதல்வியாவார்

*(தகவல் : ந.மு.றுஸ்மில், கிண்ணியா-05)*

## விலை உயர்ந்த செல்ஃபோன்

உலகிலேயே விலை உயர்ந்த செல்ஃபோனை இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு நிறுவனம் தயாரித்துள்ளது. தங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த செல்ஃபோனில் விலை மிகுந்த வைரங்களும் பதிக்கப்பட்டுள்ளன. 'iphone 3G supreme' என்று அழைக்கப்படுகின்ற இந்த செல்ஃபோனை இங்கிலாந்தைச் சேர்ந்த 'லிவர்பூல் கோல்ட் ஸ்ட்ரைக்கர்' என்ற நிறுவனத்துக்காக ஸ்டுவர்ட் ஹியூக்ஸ் என்பவர் வடிவமைத்துள்ளார். 22 கெரட் தங்கத்தினாலான இந்த செல்ஃபோனின் முன் புறத்தில் 136 வைரக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. அதில் 53 வைரக் கற்களைக்கொண்டு அப்பிள் சின்னம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. முன்புற பிரதான பொத்தான் 7.1 கெரட் மதிப்புள்ள வைரக் கல்லால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. இந்த செல்ஃபோனைத் தயாரிக்க 10 மாதங்களுக்கு மேல் ஆனதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனை வைப்பதற்கான பெட்டியும் மிகவும் விலை உயர்ந்த பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த செல்ஃபோனின் விலை பல கோடிகளைத் தாண்டும் எனவும் தெரியவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய மிரு

| | |
|---|---|
| வர்க்கம் | - மமாலியா |
| உபவர்க்கம் | - மெடதேரியா |
| கோத்திரம் | - மாசுபியாலியா |
| குலம் | - மக்ரோ பொட்டே |





குட்டியை வயிற்றுப்பையில் வைத்து வளர்த்துப் பாலூட்டும் விலங்கு கங்காரு. அவை அதிகமாக அவுஸ்திரேலியாவிலேயே வசிக்கின்றன. அவற்றில் சிவப்புக் கங்காருவே பெரியதாகும். மிகச்சிறிய கங்காரு எலியின் அளவைக் கொண்டதாகும். அது 'எலிக் கங்காரு' என்றே அழைக்கப்படுகின்றது. கங்காருவின் பின்னங்கால் இரண்டும் நீண்டதாகும். விரைவாகப் பாய்ந்து செல்வதற்கு அவை உபயோகப்படுகின்றன. உடலின் பாரத்தை நிலத்தில் சம அளவில் வைத்திருக்க அதன் நீண்டவால் பயன்படுகிறது.

## சிவப்புக் கங்காரு




கங்காரு அவுஸ்திரேலியாவிலும் அதைச் சூழவுள்ள தீவுகளிலும் வாழ்கிறது. ஆதிகால 'சேபாடிக க்ஷீரபாய்' எனும் மிருகத்தின் தோன்றலாகும். சாதுவான குணமுள்ள அதற்கு சிறிய தலையும் பெரிய காதுகளும் அமைந்திருக்கின்றன. அதன் மூளை சிறியதாகக் காணப்படுகின்றது. அவற்றில் அதிகமானவை 'மக்ரோபுஸ்' எனும் வகையைச் சேர்ந்தவையாகும்.

## மக்ரோபுஸ் கங்காரு

**எம்.கிகன்டியுஸ் கங்காரு:**
கங்காரு இனத்தில் இதுவே பெரியதாகும். சாம்பல் நிறமான



இதன் உயரம் ஐந்து அடிகளாகும். தெற்கு அவுஸ்திரேலியாவிலும் கிழக்கு அவுஸ்திரேலியாவிலும் உள்ள காடுகளில் இவற்றைக் காணலாம். சிறிய அல்லது பெரிய குழுக்களாக இவை வாழ்கின்றன. பெரிய காங்காருகள் ஒரே பாய்ச்சலில் 25 அடிவரை பாய்கின்றன. எனினும், மெதுவாகப் போகும்போது ஒரு பாய்ச்சலுக்கு ஐந்து அடிகளுக்கு மேல் அவை பாய்வதில்லை. அவை பிறக்கும்போது ஓர் அங்குல நீளமே இருக்கும். மிகப்பெரிய கங்காருவின் உயரம் ஒன்பது அடிகளாகும். அவற்றின் மூக்குத்துவாரங்களுக்கு மத்தியில் கனத்த தோல் இருப்பதைக்கொண்டு இவற்றை எளிதாக அடையாளம் காணலாம்.

**எம்.புலிகினோசஸ் கங்காரு:**
இவை கறுப்பு அல்லது கருமை கலந்த பழுப்பு நிறத்தோல் உள்ளவையாகும். அவற்றின் தோல் பெரிய கங்காருவின் தோலைவிட மென்மையானதாகும்.

**எம்.மெலனோபஸ் கங்காரு:**
கறுப்பு முகமுள்ள இந்தக் கங்காரு முன்கூறப்பட்ட 'எம் கிகன்டெயுஸ்' கங்காருவை விடவும் சற்று சிறியதாகும். அதன் உடம்பு கூடிய நாவல் நிறத்தைக் கொண்டதாகும். எனினும், உடம்பின் அடிப்பாகம் வெள்ளை நிறமாகும்.

**எம்.என்டிலோபினுஸ் கங்காரு:**
அவுஸ்திரேலியாவின் வடக்குப் பிரதேசத்தில் இந்த கங்காருவைக் காணலாம். கங்காரு இனத்தில் மிகவும் மெல்லிய தோல் இதற்கே அமைந்திருக்கிறது.

**எம்.ருபுஸ் கங்காரு:**
இது 'சிவப்புக் கங்காரு' என்றும் அழைக்கப்படுகிறது. இதன் மூக்கு நுனியில் தோல் கிடையாது. உடம்பிலுள்ள தோலும் மெல்லியதாகும். தெளிவான சில வெள்ளைக்கரைகள் முகத்தில் காணப்படுகின்றன.

**எம்.டொர்சாலிஸ் மற்றும் எம்.பாரி கங்காருகள்:**
இவை இரண்டும் 'ஒக்ரோபுஸ்' வகையைச் சேர்ந்தவையாகும். இவற்றில் 'எம்.பாரி' எனும் கங்காரு வகையை சவுத் வேல்ஸிலும் குவின்ஸ்லாந்திலும் காணலாம். முகத்திலுள்ள அழகிய அடையாளத்தின் மூலமும் நீண்ட வால் மூலமும் இதனை எளிதாகக் கண்டுபிடிக்கலாம். பெரியவற்றை விட சிறியவை பல்கியிருக்கின்றன. நியூகினி நாட்டிலுள்ள ஆர, கெய் தீவுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் இதைக்கண்டு கொள்ளலாம்.

## பெட்ரோகாலே வகை கங்காரு

இந்த வகையைச் சேர்ந்த கங்காரு





கற்களுக்கு மேலும் மலைகள் உள்ள பகுதிகளிலும் வாழும். அத்துடன், வேகமாகவும் செயற்படும் அவற்றின் வால் நுனிவரை சுருக்கமின்றி இருக்கும்.

**ஒனிகொகாலே வகை கங்காரு:**
ஓரளவு சிறிய இவ்வகைக் கங்காருகளை அதன் வால் நுனியிலுள்ள நகம் போன்ற பகுதியைக் கொண்டு அடையாளம் காணலாம்.

## கங்காரு வகைகள்

மரக் கங்காருவைத் தவிர, ஏனைய கங்காருகள் நிலத்தில் வாழும். அதுபோல் பல்வேறு அளவுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகம் கங்காரு

கங்காருகளைக் காணமுடிகிறது. பெரியது ஐந்து அடிவரை உயரம் கொண்டது. அத்துடன், எலிக் கங்காரு எனும் இனம் மிகச்சிறிய அளவானதாகும். அதன் அளவு ஒரு முயலின் அளவைக் கொண்டிருக்கும். மரக் கங்காருவைத் தவிர ஏனைய கங்காருகளுக்கு சக்தியுள்ள பின்னங்கால்களும் சக்தி குறைந்த முன்னங்கால்களும் உள்ளன. அவற்றின் மூலம் அவை பாய்ந்து பாய்ந்து அங்கும் இங்கும் நடமாடுகின்றன.



## டென்ட்ரொலகுஸ் கங்காரு

இவையே மரத்தில் வாழும் கங்காருகளாகும். மரத்தில் வ...வதற்கு ஏற்ப அவற்றின் உடல்







அமைப்பு அமைந்துள்ளது. இவற்றுக்கு வித்தியாசமாக முன்னங்கால்கள் சக்தி பெற்றவையாகும். பின்னங்கால்கள் கட்டையாகும் மற்றவற்றைவிட நீண்ட வால் இதற்கு உண்டு. சில கவர்ச்சியான நிறங்களுடையவை. இவற்றை நியூகினி குவின்ஸ்லாந்து பகுதிகளில் அதிகம் காணலாம்.

## எலிக் கங்காரு

இவற்றில் சில பெடொன்கியா வகையாகும்





கொலொப்ரிமினுஸ், பொடொரஸ் எனும் வகைகளிலும் அடங்கும். இவை



அவுஸ்திரேலியாவிலும் தஸ்மேனியாவிலும் மட்டுமே காணப்படுகின்றன. அளவில் முயல் போன்று இருப்பினும் அநேகமானவை ஏனைய கங்காருகளைப் போன்றே பாய்ந்து பாய்ந்து நகர்கின்றன. எனினும், 'பொடொஸ்' வகை கங்காரு பாயாமல் நான்கு கால்களாலும் சமமாக நடந்தே போகிறது. அதற்கு சாதாரணமான வாலே இருக்கிறது.

## வாழும் இடங்கள்

வெளிச்சமுள்ள காடுகளில் சில வாழ்கின்றன. கற்பகுதி மற்றும் மலைகளில் சில வாழ்கின்றன. மரங்களிலும் சில வாழ்கின்றன.

## விசேட தன்மைகள்

குட்டியைப் பாதுகாக்கும் பை போன்ற ஓர் உறுப்பு கங்காருவின் வயிற்றில் காணப்படுவது விசேட அம்சமாகும். பல்வேறு கங்காருகளுக்கிடையில் உயரம் வசிப்பிடம் ஆகியவற்றைக்கொண்டே வித்தியாசத்தைக் கண்டுகொள்ளலாம். சக்தியுள்ள இரு பின்னங்கால்களைப் போலவே வலிமைமிக்க வாலும் உடலின் பாரத்தைத் தாங்கும். கங்காருவின் வயிற்றுப்பை முன்புறமாகத் திறந்திருக்கும்.

## வால்

கங்காருவின் வால் மிக வலிமைமிக்கது. நிலத்தில் அதை ஊன்றி நிற்கமுடியும். அவ்வகையில், இளைப்பாறல் பெறவும் வாலைக் கங்காரு உபயோகிக்கிறது. அத்துடன், நிற்கும்போது உடலின் பாரத்தை அதன்வால் சமநிலைப்படுத்துகிறது.

## கங்காருவின் பாதம்

முன்னங்கால்களை மடித்து பின்னங்கால்களை ஊன்றிக்கொண்டு அங்குமிங்கும் நகரும் வகையில் கங்காருவின் உடல் அமைந்திருக்கின்றது. பின்பாரத்தை வால் தாங்கியபோதும் முன்கால்களின்றி சரியாதிருக்க பின்கால்களின் நாலாம் விரல்கள் நீண்டிருக்கின்றன. இரண்டாம் மூன்றாம் விரல்கள் மிகச்சிறியவையாகும். இணைந்து செயற்படும் வகையில் அவை ஒன்றாக்கப்பட்டிருக்கின்றன. பெரிய விரல்கள் இரண்டிலும் வலிமையான நகங்கள் உண்டு.

## உணவு வகைகள்

தானியம், செடி வகைகள், இலை, குழைகள் கங்காருவின் உணவாகும். சிலவேளைகளில், காய்வகைகளையும் உண்ணும் அவற்றுக்கு ஏற்றவாறே பற்கள் அதற்கு அமைந்துள்ளன. கீழ் கடைவாய்ப்பற்கள் முன்னால் அமைந்திருப்பதால் இலை, குழை, செடி வகைகளை இலகுவாக அரைக்க உதவுகின்றது. அப்பல்வரிசைகளும் அதற்கேற்ப அமைந்துள்ளன.

## கங்காருவின் சிறுபராயம்

தாய் கங்காரு கர்ப்பமுற்று 39 நாட்களுக்குப் பின்னரே குட்டி ஈனுகின்றது. பிறந்ததும் அக்குட்டி தாயின் வயிற்றுப்பையை நோக்கி ஊர்ந்துகொண்டே போகும். அதில் நுழைந்து பால் உறிஞ்சும்.



இவ்வாறாக நீண்டகாலம் தாயின் வயிற்றுப் பையில் இருக்கும். பிறந்ததும் தாயின் வயிற்றுப்பைக்குப் போவதற்காக அதன் முன் கால்கள் செயற்படும் அப்போது அவற்றுக்கு வலிமை சேர்க்கும் பின் கால்கள் போதிய வலிமை பெற்றிருக்காது. இது பிறந்த குட்டிக்கான பயிற்சியாகவே அமைந்திருக்கிறது.

தோல் அற்ற சிவப்பு உடம்பே அதற்குக் காணப்படுகின்றது. பால் உறிஞ்சுவதிலும் பாலூட்டுவதிலும் தாயிடமும் குட்டியிடமும் விசேட தன்மைகள் காணப்படுகின்றன. சில குட்டிகள் நான்கு மாதங்கள் வரை தாயின் வயிற்றுப் பையிலிருந்து கொண்டு வாழும். பால் உறிஞ்சும் குட்டி தாய் நகரும்போது தலையை வெளியே நீட்டி இலை, தழைகளை உண்ணும். ஓரளவு சக்தி பெற்றதும் தாயின் வயிற்றுப் பையை விட்டு வெளியேறி தாயோடு சேர்ந்து உணவு தேடிச்செல்லும். ஏதாவது அபாய அச்ச நிலைமை ஏற்பட்டால் தாயின் வயிற்றுப்பையை நோக்கி விரைந்தோடி வரும்.

## கங்காருவின் வரலாறு

சொற்ப அளவே கங்காருவின் பூர்வீகம் ஆராயப்பட்டிருக்கிறது. எனினும், பிலெஸ்டொசின் காலத்தில் பிரமாண்டமான கங்காருகள் அவுஸ்திரேலியாவில் இருந்ததற்குப் போதிய தடயங்கள் கிடைத்துள்ளன. அதன் உயரம் 10 அடிகளாகும்.



## சிவப்புக் கங்காரு

பொதுப்பெயர் - சிவப்புக் கங்காரு
உயிரியல் பெயர் - மெக்ரோபுஸ்ரூபஸ்
கோத்திரம் - டிப்ரொடொடொன்சியா
குடும்பம் - மெக்ரோபொட்டே





அளவு - நீண்ட தலை/உடல் அங்குலம் 29.5-63. (செ.மீ 75-160) இரு கால்களாலும் இருக்கும்போது உயரம் அடி 6 ஆகும்.

பாரம் - இறாத்தல் 37.5-198 (கி.கி 17.90) ஆண் பெண்ணை விட பாரத்தில் இரு மடங்காகும்.



பெருக்கம் - மத்திய அவுஸ்திரேலியா முழுதும் இது பரவலாக வாழ்கிறது. எனினும், வடக்கு கிழக்கு உட்பட அவுஸ்திரேலியாவின் ஏனைய பகுதிகளிலும் தஸ்மேனியாவிலும் சிவப்புக் கங்காருவைக் காணமுடிவதில்லை.

சிறப்பு அடையாளங்கள் - சிவப்புக் கங்காருக்கான தெளிவான அடையாளங்கள், பழுப்பு, சிவப்பு, நீல, சாம்பல் நிறங்கள் கலந்த தோலே கங்காருவிடம் காணப்படும். எனினும், வயிற்றின் அடிப்பாகம் வெள்ளை நிறத்தில் இருக்கும். பெண் கங்காருவிடம் நன்றாக வளர்ந்த வயிற்றுப்பை காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நடவடிக்கைகளால் புவி வெப்பமடைதல்





உலகை தற்பொழுது பயங்கரமாக அச்சுறுத்தி வரும் விடயமாக புவி வெப்பமடைதல் காணப்படுகின்றது. இதற்கு முழுக்க முழுக்க மனிதனின் கவனமற்ற, தவறான செயற்பாடுகளே காரணமாக அமைகின்றன. பூமியின் வெப்ப நிலையானது, இயற்கைக்கு எதிரான மனித நடவடிக்கைகள் காரணமாக குறைந்தகால இடைவெளியில் மிகவேகமாக அதிகரிக்கின்றது. இதுவே புவி வெப்பமடைதல் (Global Warming) எனப்படுகின்றது.

இவ்வாறான புவி வெப்பமடைதலுக்கு பலவித நச்சுவாயுக்களே மூலகாரணமாக விளங்குகின்றன. மனித செயற்பாடுகள் காரணமாகவே மிக அதிக அளவில் அவை வெளியேற்றப்படுகின்றன.

புவிவெப்பமடைதலில் பங்களிக்கும் மற்றொரு விடயம் ஓசோன் படலத்தில் (Ozone Layer) ஏற்பட்டுள்ள துவாரமாகும். அதனூடாக் சூரியக்கதிர்கள் நேரடியாக புவியை வந்தடைந்து புவியின் வெப்பநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்பட புவியில் மனித செயற்பாடுகளால் வெளியேற்றப்படும் வாயுக்கள், புவி மாசுக்கள், அணுப் பரிசோதனைகள் என்பனவே முக்கிய காரணமாக அமைகின்றன. பெரும்பாலும் நச்சு வாயுக்கள் குளிரேற்றி சாதனங்கள், வாசனைப் பொருட்கள், பூச்சு வகைகள், களைக் கொல்லிகள், வாகனப்புகை, தொழிற்சாலைக் கழிவுகள் ரசாயனப் புகைகளிலிருந்தும் வெளியேற்றப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு காரணிகளின் தாக்கத்தால் விளையும் புவி வெப்பமடைதலின் நேரடி அறிகுறிகளாக சுனாமி, புவிநடுக்கம், பாரிய மழைவீழ்ச்சி அல்லது வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ, வறட்சி,புயல், வெப்ப அலை, அமிலமழை, பனியுருகுதல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.

அண்டாட்டிக்கா மற்றும் ஆட்டிக் பிரதேச பனிமலைகள், பனிப் பாறைகள் உருகி கடலுடன் சேர்ந்து கடல் மட்டத்தை அதிகரிப்பதும் நாம் அறிந்த விடயமே. இவ்வாறு கடல் மட்டம் அதிகரிப்பதால் மாலைதீவுகள் போன்ற சிறு தீவுக்கூட்டங்கள் மூழ்கிப்போகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

அத்துடன், சூழலுக்கு கேடு தரும் வாயுக்களை வெளியேற்றும் உபகரணங்கள் இயந்திரங்களின் பாவனையைக் குறைத்தல், அவற்றிற்குப் பதிலாக வேறு கருவிகளை உருவாக்கிப் பிரபல்யப்படுத்துதல், முடியுமான வரை அணுப்பரிசோதனைகள் போன்றவற்றை மட்டுப்படுத்தல் அல்லது நிறுத்துதல் போன்ற செயற்பாடுகளால் புவி வெப்பமடைதலைக் குறைக்கலாம். எனினும், புவியை முன்னைய ஆரோக்கிய நிலைக்கு எடுத்துச் செல்வது என்பது கடினமான விடயம். ஆனால், கடினமாக உழைத்தால் அதை எட்டிவிடலாம்.

புவி வாழ் மக்கள் அனைவரும் இயற்கையை நேசித்து வளப்படுத்த முன்வந்தால் மட்டுமே இதன் பாதிப்புக்களிலிருந்து தப்பலாம்.



ஆர்.என்.மலரினி,
தரம்-10,
ஓமந்தை, வவுனியா.



## நிறைவாய் வாழணும்!

தாயைப் போற்றி வாழணும்
தந்தை சொல்லை மதிக்கணும்!
ஓய்வு இன்றி உழைக்கணும்
ஒன்றுபட்டு வாழணும்!

காயைப் போன்ற சொல் நீக்கி
கனிவாய் நாளும் பேசணும்!
சேயைப் போலக் கள்ளமில்லாச்
செம்மை உள்ளம் நாடணும்!
நாயைப் போன்ற நன்றியுடன்
நாமும் வாழப் பழகணும்!
வாய்மை பேசி என்றுமே
வாழும் வகையில் வாழணும்!

போய் நாம் பிறரின் வாசலில்
பொருளை இரந்து நிற்காமல்
மாயும் போதும் மற்றவர்கள்
மதிக்க வாழ்ந்து
மறையணும்!



## மனதை மயக்கும் இயற்கை

இயற்கையின் அழகு நம்மைக் கொள்ளை கொள்ளக்கூடியது. நமது மனதிலுள்ள சோகங்களை நீக்கி, நம்மை ஆனந்தப்பட வைக்கக்கூடிய சக்தி இயற்கை அழகிற்கு உண்டு.

சலசலத்தோடும் நீரோடைகள், இளந்தென்றலுக்கு நடனமாடும் பசுந்தாவரங்கள், கானம் இசைத்துத் திரியும் பட்சிகள், உயர்ந்த மலைகள் போன்ற இயற்கையின் விருந்தினால் நாம் உளமகிழ்கிறோம்.

காலையில் நாம் காணும் இயற்கைக் காட்சிகள் இன்பமயமானவை. இரவில் உறங்கியபின் விடியற்பொழுதில் துயில் விட்டெழும் எமது கண்களுக்கு இயற்கை அன்னை படைக்கும் காட்சிகளே இனிய விருந்தாகும். வயல்வெளிகளை நோக்கிச் செல்லும் விவசாயிகள், மந்தைகளுடன் புல்வெளிகளை நோக்கிச் செல்லும் இடையர்கள், மலர்களில் தேன் அருந்தப் பறந்து வரும் வண்டுகள் என இனிய காட்சிகளைக் கண்டு மகிழ்கிறோம்.

அத்துடன், பூத்துக் குலுங்கும் மரங்களும் மணம் பரப்பும் மலர்களும் எமக்கு மகிழ்வளிக்கின்றன. பாய்ந்து வரும் அருவிகளும் நீர்வீழ்ச்சிகளும் கண்களுக்கு குளிர்மையளிக்கின்றன.

எனவே, எம்மை மகிழ்விக்கும் இயற்கையை நாமும் பாதுகாப்போம்.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

## கஞ்சன் கந்தையா



கந்தையா ஒரு மகா கஞ்சன். அவனுக்கு செலவு செய்ய மனமே வராது.

ஒருமுறை கடற்கரையோரமாக உலாவச் சென்ற கந்தையாவுக்குத் தாகம் எடுக்கத் துவங்கியது. நாக்கு வறண்டு போகவே வேறு வழியில்லாமல் இளநீர் ஒன்றை வாங்கி அருந்தலாம் என்று நினைத்தான்.

அருகில் இருந்த கடைக்காரனிடம் சென்று, ''ஓர் இளநீர் என்ன விலை?'' என்று கேட்டான். கடைக்காரன் ''ஆறு ரூபாய் சாமி'' என்றான். ''நான்கு ரூபாவுக்குத் தருகிறாயா?'' என்றான் கந்தையா. ''அதோ! அங்கே போங்கள் அங்கு கிடைக்கும்'' என்றான் கடைக்காரன்.

கந்தையாவும் நடக்கலானான். கடையும் வந்தது. ''இளநீர் எவ்வளவு தம்பி?'' என்றான் கந்தையா. ''ஐந்து ரூபா'' என்றான் கடைக்காரன். ''மூன்று ரூபாவுக்குத் தருகிறாயா?'' என கந்தையா கேட்கவே, ''அதற்கு இன்னும் கொஞ்சம் தள்ளிப்போங்க கிடைக்கும்'' என்றான். கடைக்காரன் கூறியதைக் கேட்டு தன் தாகத்தையும் பொருட்படுத்தாது நடந்தான் கந்தையா.

ஒருவழியாக இறுதியாக உள்ள கடைக்காரனிடம் வந்து விட்டான். ''ஐயா எனக்குத் தாகமாக இருக்கிறது. ஒரு இளநீர் கொடுங்களேன்'' என்று கந்தையா கேட்க, ''நான் கொடுத்தால் இரண்டு ரூபா. நீங்களே பறித்துக்கொண்டால் பணம் தரத்தேவையில்லை'' என்றான் கடைக்காரன்.

அவ்வளவுதான் விடுவிடுவென மரத்திலேறிய கந்தையா இளநீரில் கையை வைத்தானோ இல்லையோ, மரத்திலிருந்து கால் வழுக்கி கீழே விழுந்தான். அப்புறம் என்ன? ஆறு ரூபா இளநீர் ஆறாயிரம் ரூபா செலவில் கொண்டு போய்விட்டது.

பாத்திமா றிஸ்வானா ரவுப்,
தரம் - 11,
கொடேகொட மு.வித்.,
ஹெம்மாதகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை அழகுபடுத்தும் ஆறுகள்

உலகுக்கு குளிர்மையும் பசுமையும் தரும் விதத்தில் ஆறுகள் பலவிதங்களில் பாய்ந்து செல்கின்றன. உலக அன்னையின் அபூர்வமான படைப்பான ஆறுகள் உலகின் நாற்புறமும் பாய்ந்து செல்கின்றன. மலை முகடுகளில் இருந்து நிலத்தை நோக்கிப் பாய்ந்து வரும் ஆறுகளின் அழகு கண்கொள்ளாக் காட்சியாகும். உலகை அழகுபடுத்தும் ஆறுகள் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.

## மிசிசிப்பி ஆறு

அமெரிக்காவின் மிசி சிப்பி, ஹட்சன், ஓஹிட், பொட்டோமெக், சஸ்துவான் ஆகிய ஆறுகளில் 'மிசி சிப்பி' ஆறு மிகப் பிரதான இடத்தினை வகிக்கின்றது. இது அமெரிக்கப் பெருங்கண்டத் தினைச் சேர்ந்த பெரும் கங்கையாகும். நீளம் 6275 கி.மீ. வட அமெரிக்காவின் மத்திய 'மினசோட்டா' மலையில் இருந்து ஆரம்பித்து வளைகுடா கடற்பிராந்தியத்தின் சமுத்திரத்தினை அடைகின்றது. பல வளைவுகள் கொண்ட இந்த ஆற்றுக்கு மிசிசிப்பி என்ற பெயர் இந்திய வழிமுறையின் அடிப்படையில் ஏற்பட்டது. மிசிசிப்பி என்ற சொல் அல்கொன்ரியன் இந்திய சொல்லாகும். மிசி என்பது விசாலம். சிப்பி என்பது தண்ணீர் என்றும் பொருள்படுகின்றது.

இந்த ஆற்றின் ஓடை வழிகள் இரண்டு குறுக்காக மறிக்கப்பட்டு கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ளவும், வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்தவும் ஆலோசிக்கப்பட்டது. எனினும், இவை நிராகரிக்கப்பட்ட யோசனைகளாகிவிட்டன. இந்தப் பெரும் ஆற்றின் நீரோட்டத்தினை எந்த சக்தியினாலும் அசைக்க முடியாதென அமெரிக்க வாசிகள் நம்புகின்றனர். எனினும், நியூ ஓர்லியன்ஸ் நகரத்தின் ஊடாகப் பாய்ந்து செல்லும் ஆற்றின் வெள்ளப்பெருக்கினைத் தடுக்கும்முகமாக அணைகள், செயற்கைத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மிசிசிப்பி ஆறு மிசுறு ஆற்றுடன் சென் லுயிசில் என்ற இடத்தில் கலக்கின்றது. இந்த ஆற்றின் போக்குவரத்துக்கென முன்பு தட்டையான



படகுகளே பயன்படுத்தப்பட்டன. அதன்பின் நீராவிப் படகுகள் மற்றும் இயந்திரப் படகுகள் பயன்படுத்தப்பட்டன. இந்த பெரும் ஆற்றின் வேகம் செக்கனுக்கு 18,000 கியுபிக் மீற்றர் ஆகும்.

## கொங்கோ ஆறு



''பிள்ளைகளே கவனம். ஆற்றுக்கு செல்லவேண்டாம். நேராக பாடசாலை போய்வரவேண்டும். கிணற்றில் தேவையான அளவுக்கு நீர் இருக்கின்றது. தடாகத்தை நிரப்பித் தருகின்றோம். அதில் நீங்கள் நீந்தி விளையாடலாம்'' - கொங்கோ ஆற்றங்கரையில் வசிக்கும் மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அடிக்கடி கூறும் உபதேசம்தான் இது.

உண்மையில் 'கொங்கோ' ஆறு மிகவும் வேகமானது. ஆழமானது. இரக்கக் குணமற்றது. அதன் ஆரம்பம் தெளிவற்றது. எனினும், அது சம்பியாவின் டென்கனிகா மற்றும் மலாவிக்கிடையில் பிறந்துள்ளது என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஆபிரிக்கா கண்டத்தை அலங்கரிக்கும் இந்த கொங்கோ நதி, கொங்கோ மக்கள் குடியரசு, மத்திய ஆபிரிக்கக் குடியரசு, அங்கோலா, தன்சானியா கமரூன், சம்பியா, புருண்டி, ருவாண்டா ஊடாக சென்று அத்திலாந்திக் சமுத்திரத்தில் சங்கமிக்கின்றது. மாயி டொம்பே என்ற இடத்தில் இச்சங்கமம் நிகழ்கின்றது. நதியின் நீளம் கி.மீ 4700. நீரின் ஆழ நீரோட்டம் செக்கனுக்கு கியூபிக் மீற்றர் 41,000.

கொங்கோ வாசிகள் நதி நீரோட்டத்தில் தூண்டில்களை இட்டு மீன்களைப் பிடிப்பதில் பெரும் ஆற்றல் மிக்கவர்களாக உள்ளனர்.

கொங்கோ நதி கப்பல் போக்குவரத்துக்கும் உகந்தது. எனினும், நதியை சூழவுள்ள நீர்த்தாவரங்கள் இதற்கு இடையூறாகும். எனினும், இந்த இடையூறைப் பொருட்படுத்தாது வருடாந்தம் 20 லட்சத்துக்கும் அதிகமான தொன் நிறை கொண்ட பண்டங்கள் போக்குவரத்து செய்யப்படுகின்றன. இந்த நதி மின் உற்பத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது. மின் உற்பத்தி சக்தி கிலோ வோட் 130,000,000.

## வொல்கா நதி

ரஷ்ய இலக்கியம் முழுவதும் பரவிச் செல்லும் பெருமைக் குரிய நதியே இந்த வொல்கா நதி. இது ரஷ்யாவின் விசால மான நதியாகும். எப்பொழுதும் நீரால் நிரம்பியிருக்கும். இது மொஸ்கோ நகரின் கிழக்கின் உள்ள 'வல்டாய்' மலையில் ஆரம்பித்து உபநதிகள் பலவற்றுக்கு பிறப்பினை வழங்கு கின்றது. வொல்கா நதி அதன் இரு மருங்கிலும் உள்ள நகரங் களைப் பிரிக்கின்றது. அதன் தென்பகுதியில் உள்ள நகரங் களுக்கு ஆண்களின் பெயர்களும் வலது பகுதி நகரங் களுக்கு பெண்களின் பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன.

யரலொஸ், சரட்டோவ், ஹிம்பர்ஸ்கன் என்பன தெற்கு மூலையில் இருக்கும் நகரங்களில் சிலவாகும். சமாரா, கசான், அஸ்தர்கான் இடது மூலையில் இருக்கும் சில நகரங்களாகும். வொல்கா நதியின் நீளம் 3645 கி.மீற்றர்.



அது ரஷ்யா, கசகஸ்தான் ஊடாக சென்று கஸ்பியன் கடலுடன் கலக்கின்றது. நதியின் நீர் பாய்ந்து செல்லும் வேகம் செக்கனுக்கு 8,000 கியூபிக் மீற்றராகும்.

பண்டைய காலத்தில் ''ரா' என்ற பெயரில் அழைக்கப்பட்ட இந்த நதியின் உப நதிகளின் எண்ணிக்கை 70. பிரதான உபநதி அத்துபா. ரஷ்யாவின் உள்ளகப் பண்டப்போக்குவரத்து இந்த உப நதியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. வொல்கா ஆற்றின் கரைப்பகுதியில் 'அஸ்த்ர்கான்' எனும் சரணாலயப் பகுதி ஒன்றுள்ளது. அது பறவைகள் சரணாலயமாகும். பறவைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் பிரபல பகுதியாகும். வெள்ளை அன்னங்கள், கறுப்பு அன்னங்கள், பெலிக்கன் ஆகிய நூற்றுக்கணக்கான பறவைகள் இங்கு வசிக்கின்றன.

## டன்யூப் நதி

ஐரோப்பா கண்டத்தினைச் சேர்ந்த மற்றுமொரு பெரிய நதி டன்யூப் நதி. 2850 கி.மீ நீளம் கொண்டது. ஒவ்வொரு இனத்தவர்களதும் பெயர்கள் இதற்கு சூட்டப்பட்டுள்ளன. டொனோஜ், ஸ்லோவக், டுனாஜனா வுனா, டுனா என்பன இதன் சில பெயர்களாகும். டன்யூப் நதி பாய்ந்து செல்லும் பாதையில் முதலில் சந்திக்கும் நகரம் ரெஜென்ஸ்பர்க். இந்த நகரம் புராதன தெய்வ வழிபாட்டுத் தலங்களுக்கும் தரமான 'வைன்' பானத்திற்கும் புகழ் பெற்றதாகும். உப நதிகளினாலும் கரையும் பனிக்கட்டிகளினாலும் நதி போஷிக்கப்படுகின்றது.

டன்யூப் நதி எட்டு நாடுகளைக் கடந்து செல்கின்றது. ருமேனியா, ஹங்கேரி, அவுஸ்திரியா, சேர்பியா, ஜேர்மனி, ஸ்லோவாக்கியா, பல்கேரியா, பொஸ்னியா என்பனவே அவை. பல நாடுகளைக் கடந்து செல்லும் நதி இறுதியில் கருங்கடலில் சங்கமிக்கின்றது. 1962 ஆம் ஆண்டில் டன்யூப் நதிக்கரைப்பகுதி இயற்கை வனப்பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இது நீர்வாழ் உயிரினங்களின் வாழிடமாகும். அத்துடன், இங்கு சிறிய பற்பல தீவுகளும் உள்ளன. திசா, சாவா, மொரவா, ஜுயூ, ஒல்ட்டி, சிர்ட்டி, புருத் ஆகிய உபநதிகள் இதில் இணைகின்றன.



(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II

சுட்டெண்: ................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

(01) கீழே தரப்பட்டுள்ள விவரணப்பகுதியை வாசித்து, I தொடக்கம் X வரையான வினாக்களுக்கு விடை தருக.

> இயற்கை எமக்கு அளித்த கொடைகளில் காடுகள், அருவிகள், குளங்கள், உயிரினங்கள் போன்ற பல்வேறு தொகுதிகளைக் காணக்கூடியதாக இருக்கின்றன. இங்கு பல்வேறு உயிரினங்கள் இயக்கச் சமநிலையில் வாழ்கின்றன. அனைத்து உயிரினங்களும் ஒன்றில் ஒன்று தங்கிவாழ்வதால், இயற்கை இவற்றுக்கிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்தியுள்ளது. வானை முட்டுவதுபோல் காணப்படும் மலைகளின் காட்சிகளோ கண்ணுக்கு விருந்தளிப்பன. அந்த மலைகளின் ஏற்ற இறக்கங்களில் அல்லும்பகலும் சலசலவெனப் பாய்ந்து ஓடிவரும் நீர் அருவிகளின் காட்சியோ கண்கொள்ளாக் காட்சியாகும்.

(i) கொடைகளில்' என்பதன் ஒத்தகருத்து தரும் சொல்லினை எழுதுக.

(ii) இங்கு எத்தகைய காட்சி பற்றி கூறப்பட்டுள்ளது?

(iii) 'மலைகள்' என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக.

(iv) இங்கு கூறப்பட்ட 'இயற்கை' என்பதன் எதிர்க்கருத்து ஒன்று தருக.

(v) இங்கு காணப்படும் உவமைத்தொடர் ஒன்றை எழுதுக.

(vi) இங்கு காணப்படும் இணைமொழிகள் இரண்டு தருக.

(vii) இங்கு தரப்பட்ட இரட்டைக்கிழவியை எழுதுக.

(viii) இங்கு கூறப்பட்ட உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கைச் சொல்லை எழுதுக.

(ix) 'இயக்கச் சமநிலையில் வாழ்கின்றன' என்பதில் 'சமநிலையில்' என்பதன் கருத்து யாது?

(x) 'கண்கொள்ளாக் காட்சியாகும்' என்பதால் கருதப்படுவது யாது?

(02) கீழே கட்டத்தினுள் காணப்படும் சொற்களை மட்டும் பயன்படுத்தி சரியான கருத்துள்ள நான்கு சொற்களுடன்கூடிய வாக்கியங்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| பெறுவார்களாக | கடல்கோளால் | பயன் |
| சொத்துக்கள் | மாணவர் | லட்சக்கணக்கானோரின் |
| படித்து | அழிக்கப்பட்டன | அனர்த்தம் |
| இலங்கை | ஆண்டின் | சென்றனர் |

(i) ..................

(ii) ..................

(03) பின்வரும் சொற்கூட்டம் உணர்த்தும் தனிச்சொல்லை எழுதுக.

(i) சூரியன், சந்திரன், அக்கினி - ..................

(ii) கல்வி, செல்வம் - ..................

(04) பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

(i) ஆடு மேய்ப்பவனை எவ்வாறு அழைக்கலாம்? - ..................

(ii) திரப்பு என்பதன் கூட்டத்தைக் குறிக்கும் சொல் - ..................

(05) பின்வரும் வாக்கியங்களில் வரவேண்டிய சரியான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.

(i) பாலில் இருந்து .................. எடுக்கலாம்.
(வெண்ணை/வெண்ணெய்/எண்ணெய்)

(ii) தேசிய .................. பாதுகாத்தல் வேண்டும்.
(அடயாளங்களை/அடையாளங்களை/அடையாலங்களை)

(06) கீழே தரப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) உங்கள் கைகளைத் தட்டுங்கள் - ..................

(ii) முன்பக்கம் செல்லுங்கள் - ..................

(07) பின்வரும் ஆங்கிலத் தொடர்களின் தமிழ்க்கருத்துக்களை எழுதுக.

(i) Please listen to me - ..................

(ii) Please hurry up - ..................

(08) பின்வரும் சிங்களத் தொடர்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.

(i) கதாவ கியவன்ன - ..................

(i) கீ(த்)த கயன்ன - ..................




★ *09-24 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.*


(09) மண்ணெண்ணெய் அருந்திய ஒருவருக்கு செய்ய வேண்டிய முதலுதவி;

(1) உப்புநீரைக் குடிக்கக்கொடுத்தல் (2) சவர்க்கார நீரைக் குடிக்கக்கொடுத்தல் (3) ஒலிவ் எண்ணெய்யை குடிக்கக்கொடுத்தல்

(10) வெப்ப, குளிர் பிரதேசங்களுக்குப் பொருத்தமான ஆடைகள் முறையே;

(1) கம்பளி, பருத்தி (2) பருத்தி, கம்பளி (3) நைலோன், கம்பளி

(11)




இங்கே காணப்படுவது;

(1) சந்திர கிரகணம்
(2) சூரிய கிரகணம்
(3) சந்திரக்கலை

(12) வானவில்லில் காணப்படாத நிறம்;

(1) கருநீலம் (2) ஊதா (3) கறுப்பு

(13) வயலை மட்டப்படுத்த உழவர்கள் பயன்படுத்தும் கருவி;

(1) கலப்பை (2) வேலைக்காரன் கம்பு (3) பரப்பும் பலகை

(14) கூடைப்பந்தாட்ட விளையாட்டில் விளையாடக்கூடிய வீரர்களின் எண்ணிக்கை;

(1) 2 முதல் 5 வரை (2) 5 முதல் 7 வரை (3) 3 முதல் 5 வரை


(15)



இக்குறியீடு குறிப்பது;

(1) தொட வேண்டாம்
(2) குப்பை போட வேண்டாம்
(3) வாகனங்களை நிறுத்த வேண்டாம்

(16)




இங்கு ஆளி S ஐ R உடன் இணைக்கும்போது ஒளிர்வது;

(i) A
(ii) B (iii) C

(17) பராக்கிரம சமுத்திரத்தைக் கட்டிய அரசன் யார்?

(1) பண்டுகாபயன் (2) மகாசேனன் (3) பராக்கிரமபாகு

(18) இலங்கையில் முதன்முதலில் தேசிய கீதம் பாடப்பட்ட தினம்;

(1) குடியரசு தினம் (2) சுதந்திர தினம் (3) பாடசாலை தினம்

(19) பதிவுத்தபால் ஒன்றை அனுப்புவதற்கான தற்போதைய தபாற்கட்டணம் யாது?

(1) ரூபா 16.00 (2) ரூபா 20.00 (3) ரூபா 5.00

(20) மழை காலங்களில் புற்றிலிருந்து வெளியே வருவது;

(1) பாம்பு (2) ஈசல் (3) உடும்பு

(21) பானம் தயாரிக்கப் பயன்படும் பூ;

(1) வில்வம் பூ (2) கராம்பு பூ (3) வாழைப் பூ

(22) கைவிசிறி, பாய், சிறுபெட்டி போன்றவற்றை தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள்;

(1) பனையோலை (2) பன்புல் (3) கடதாசி

(23) அதிகளவு வளியூட்டமும் குறைந்தளவு நீரையும் தேக்கி வைக்கக்கூடிய மண்;

(1) மணல் மண் (2) களி மண் (3) இருவாட்டி மண்

(24) பிறெயில் முறை பயன்படுத்தப்படுவது;

(1) பார்வைக் குறைபாடு உள்ளோருக்கு
(2) நடக்க முடியாதோருக்கு
(3) பேச முடியாதோருக்கு

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஹொங் கொங், கொவ்லூன் தீவுகளின் சேய்மை தோற்றம்
தலைமை ஆட்சியாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்
ஹொங் கொங் பல்கலைக்கழகம்


நட்சத்திரங்களின் ஒழுங்கையிலுள்ள சிலை ஒன்று




# ஹொங் கொங்

**அரசு:** தெரிவுசெய்யப்படாத ஜனநாயக உயர் ஆட்சிபீடம்.

**தாபிக்கப்பட்டது:** பிரித்தானிய முடியாட்சியின் கீழ் 1842 ஒகஸ்ட் 29 திகதியில் இருந்து 1941 டிசம்பர் 25 ஆம் திகதி வரை. அதன்பின், 1945 ஒகஸ்ட் 15 வரை ஜப்பானின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. மீண்டும் பிரித்தானியர் வசமாகி, 1997 ஜூலை 1 ஆம் திகதியில் மக்கள் சீனக் குடியரசிடம் கையளிக்கப்பட்டது.

**தேசிய விடுமுறை தினம்:** தேசிய தினம் ஒக்டோபர் 1.

**தேசிய பெயர்:** மக்கள் சீனக் குடியரசின் ஹொங் கொங் விசேட நிர்வாகப் பிரதேசம்.

**தலைமை ஆட்சியாளர்** (2005): டொனல்ட் ஸேங்.

**தலைமை நீதியரசர்:** அண்ரூ லி.

## புவியியல்

சீனாவின் சிறப்பு ஆட்சிப் பகுதிகளில் ஒன்றாகிய ஹொங் கொங், சீனாவின் தென்கிழக்கு கடற்பகுதியில் அமைந்துள்ளது. சுமார் 230 சிறிய தீவுக்கூட்டங்களின் தொகுதியே ஹொங் கொங் ஆகும்.

ஹொங் கொங் தீவு, கொவ்லூன் குடாநாடு மற்றும் புது ஆள்புலங்கள் உள்ளிட்ட 230 சிறிய தீவுகளைக்கொண்டதே ஹொங் கொங் பிராந்தியமாகக் கொள்ளப்படுகின்றது. இந்த தீவுகளுக்கிடையே மிகப்பெரியது 'லென்டோவ்' தீவாகும். நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 40% மானது நாட்டின் பூங்காக்களுக்கும் இயற்கை கொடைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மொத்த நிலப்பரப்பு:** 422 சதுர மைல் (1092 ச.கி.மீ).




**தலைநகரம்:** இல்லை (ஹொங்கொங் சீனாவின் தனித்துவமான நிர்வாகப் பிரிவாக இருக்கின்றது).

**நாணயம்:** ஹொங் கொங் டொலர்.

**மொழிகள்:** சீனமொழி, ஆங்கிலம் (இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகள்).

**சமயம்:** பல்வேறு உள்நாட்டு மத நம்பிக்கைகள்.

**மக்கள் தொகை** (2009): 7,018,636.

**இணையத்தளக் குறியீடு:** .hk

**தொலைபேசி குறியீட்டு இல:** +852

**உயர் சிகரம்:** டாய் மோ ஷான்-3143 அடி ( 958 மீ);

**தாழ் மையம்:** தென் சீனக்கடல்.

**தேசிய சின்னங்கள்: மலர்** -Bauhinia blakeana;

**பிரபல்யமான விளையாட்டு** - குதிரை ஓட்டம்; மரம், பறவை, மிருகம் என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை.

**தேசிய கீதம்:** மக்கள் சீனக்குடியரசின் தேசிய கீதமே இங்கு பாவனையில் உள்ளது.

## வரலாறு

கொவ்லூன் குடாநாட்டில் இருந்து துண்டிக்கப்பட்ட, 32 ச.மைல் அல்லது 83 ச.கி.மீ பரப்பளவைக்கொண்ட சீனாவின் ஒரு பகுதியாகவே இருந்தது. பின்னர், 1841 இல் ஹொங் கொங்கை பிரித்தானிய கடற்படை கைப்பற்றியது. 1898 இலிருந்து 99 வருடங்களுக்கு பிரித்தானியா ஹொங் கொங்கை குத்தகைக்கு எடுத்துக்கொண்டது. இரண்டாம் உலகப் போரின்போது சில வருடங்களுக்கு ஜப்பானின் ஆதிக்கத்தில் இருந்தது. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் மிகப்பெரிய வர்த்தக மையமாக வளர்ந்தது. 1997 ஜூலை 1 ஆம் திகதி பிரித்தானியா ஹொங் கொங்கை சீனாவிற்கு கைமாற்றம் செய்தது.

## காலநிலை

ஹொங் கொங்கின் காலநிலையில் இளவேனில் காலமும் கோடைகாலமும் மிகுந்த வெப்பமுடையதாக இருக்கும். அதேவேளை, இக்காலகட்டத்தில் பல நாட்களுக்கு மழையும் பொழியும். மே முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதி ஹொங் கொங்கில் கோடை காலமாகும்.

பொதுவாக மிதமான வெப்பநிலையும் பிரகாசமான சூரிய ஒளியும் இங்கு காணப்படுவதால், ஹொங் கொங் உல்லாசப் பயணிகளின் மனதை பெரிதும் கவர்ந்துள்ளது. மாரிகாலம் மத்திமமான மழையும் குளிரும் மேகம் நிறைந்த வானமும் காணப்படும்.

## கலாசாரம்

நீண்ட காலமாக சீன கலாசாரத்தில் ஊறிய ஒரு நாடாகவே திகழ்ந்து வந்தபோதும், பிரித்தானிய காலனித்துவவாதிகளின் ஆட்சியின்கீழ் வந்தபின், ஐரோப்பிய கலாசார தாக்கங்கள் இங்கு ஏற்பட்டன. 1997 இல் மீண்டும் சீனாவுடன் இணைக்கப்பட்டதால், ஹொங் கொங் தனது பழைமையான கலாசாரத்தை தொடரக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2007): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்:** 3.849 மில்லியன். **செல்லிடத் தொலைபேசிகள்:** 9.310 மில்லியன். **வானொலி நிலையங்கள்** (1998): AM 7, FM 13. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 179. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்:** 2. தவிர; கேபல்கள் மற்றும் செய்மதி தொலைக்காட்சி அலைவரிசைகளும் உள்ளன.

## போக்குவரத்து

உயர்ந்த நிலையிலுள்ள முன்னேற்றகரமான போக்குவரத்து வலையமைப்பை இங்கு காணலாம். பொது மற்றும் தனியார் துறை போக்குவரத்துகள் சிறந்த முறையில் இயங்குகின்றன. 90% க்கு மேற்பட்ட மக்கள் நாள்தோறும் பொது போக்குவரத்து சாதனங்களையே பயன்படுத்துகின்றனர். உலகிலேயே அதிக அளவு பணத்தை அறவிடும் போக்குவரத்துத்துறை ஹொங் கொங்கிலேயே காணப்படுகின்றது.


தலைமை ஆட்சியாளர்





பிராந்திய இலச்சினை

## பொருளாதாரம்

**தொழிலாளர் தொகை** (2007): 3.64 மில்லியன். **வேலையற்றோர்:** 4.1%. **பிரதான கைத்தொழில்கள்:** புடைவை, தைத்த ஆடைகள், உல்லாசப் பயணத்துறை, வங்கித்துறை, கப்பல் போக்குவரத்து, இலத்திரனியல் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், சுவர் மற்றும் கைக்கடிகாரங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** மக்கள் சீனக் குடியரசு, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர், தென் கொரியா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- ஓஷன் பார்க், கோல்டன் பவுஹினியா சதுக்கம், ஜம்போ கிங்டம் உட்பட இன்னும் பல-ஹொங் கொங் தீவு.
- நட்சத்திரங்களின் ஒழுங்கை (சினிமா துறைப்பகுதி), யுவென் போ பறவைகள் பூங்கா, கோல்ட் ஃபிஷ் சந்தை, பூக்கள் சந்தை இன்னும் பல-கொவ்லூன் தீவு.
- ஹொங் கொங் டிஸ்னி லேண்ட், பெரிய புத்தர் சிலை, சிடி ஆர்ட் சதுக்கம், பிரசித்தி பெற்ற ஆலயங்கள் உட்பட இன்னும் பல -ஏனைய தீவுகள்.



அடுத்த இதழில் இருந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இவ்வாறுதான் நேரம் கல



**எமது அன்றாட அலுவல்களை ஒழுங்காக மேற்கொள்ள உதவுவது நேரம் ஆகும். பண்டைய காலத்தில் எமது முன்னோர்கள் பல்வேறு விதங்களில் நேரத்தைக் கணிப்பிட்டு வந்தனர். படிப்படியாக உலகில் ஏற்பட்ட வளர்ச்சியை அடுத்து, நேரக்கணிப்பீட்டிலும் பொது இணக்கப்பாடு ஏற்பட்டது**




## எமது பூமி

பூமி உருண்டையானது என்று கூறப்பட்டாலும், உண்மையில் அது உருண்டையான அமைப்பில் இல்லை. காரணம், அதன் குறுக்களவின் விட்டம் 12.757 கிலோமீற்றர் ஆகவும் உயரமான பகுதியின் விட்டம் 12.714 கிலோமீற்றர் ஆகவும் இருக்கின்றமையாகும். இதனால், துருவப் பகுதியில் தட்டையாக இருக்கும் பூமி, அகலப் பகுதியில் சற்று வீங்கியவாறு காணப்படுகின்றது.

பூமி தொடர்ந்து சுற்றிக்கொண்டே இருப்பதால், இருளும் ஒளியும் புவி எங்கும் ஏற்படுகின்றது. அதன்படி, ஒரு பகுதியில் இருள் சூழும்வேளையில் இன்னொரு பகுதி விடியலைச் சந்திக்கின்றது. பூமியில் இரவு, பகல் ஏற்படுவதால் அன்றாட அலுவல்களை திட்டமிட்டு குறிப்பிட்ட நேரத்தில் செய்துகொள்ள முடிகின்றது.பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தொடர்பு மற்றும் பூமியின் சுழற்சி என்பவற்றின் அடிப்படையில் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் சூரிய உதயம், அஸ்தமனம் என்பன நிகழ்கின்றன. இவற்றை அடிப்படையாகக்கொண்டு நேரமும் கணிக்கப்படுகின்றது; நிர்ணயிக்கப்படுகின்றது.

## பூமி இரண்டாகப் பிரிக்கப்பட்டால்...?

பூமியின் நடுவே அமைந்திருப்பதாகக் கருதப்படும் ரேகை 'பூமத்திய ரேகை' ஆகும். அதன் அளவீடு $0^0$ என்று கருதப்படுகின்றது. இந்த ரேகையினால் பூமி இரண்டு பாகங்களாக சரிசமமாகப் பிரிக்கப்படுவதாகக் கற்பனை செய்துகொள்வோம். அப்போது இந்தப் பிளவினால் ஏற்படும் ரேகைக்கு மேலுள்ள பகுதி 'வட துருவம்' (வட அரைக்கோளம்) என்றும் ரேகைக்கு கீழான பகுதி, தென் துருவம் (தென் அரைக்கோளம்) என்றும் அழைக்கப்படுகின்றது.

## அகலாங்கு

அகலாங்கு என்பது பூமத்திய ரேகைக்கு சமாந்தரமான கற்பனைக் கோடாகும். வட,தென் துருவம் வரை கற்பனைக்கோடு வரையப்படுவதாக வைத்துக்கொண்டால், பூமத்திய கோட்டின் மேலான வடக்கு நோக்கி அமையும் கோடு 'வட அகலாங்கு' என்றும் பூமத்திய கோட்டிற்குக் கீழாக தெற்கு நோக்கி வரையப்படுவது 'தென் அகலாங்கு' என்றும் அழைக்கப்படும். அகலாங்கு $0^0$ யிலேயே ஆரம்பமாகின்றது. அதன்படி, மத்திய கோடு $0^0$ அகலாங்காகும்.

## நெட்டாங்கு

தீர்க்கரேகை எனப்படும் நெட்டாங்கானது புவியின் அமைவைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் கற்பனைக் கோடாகும். வடக்கு மற்றும் தெற்கு முனைகளை இணைக்கும் விதமாக பூமத்திய கோட்டுக்கு குறுக்கே பயணிப்பதாக இது அமைந்திருக்கும். நேரத்தைக் கணிப்பீடு செய்வதற்கு பயன்படும் ரேகையும் இதுவே ஆகும்.


அகலாங்கு போன்று நெட்டாங்கும் $0^0$ யிலேயே ஆரம்பமாகின்றது. இந்த $0^0$ ஆனது லண்டனின் கிரேனிச் நகரத்தின் நண்பகல் நேரத்தை அடிப்படையாகக்கொண்டே அமைந்துள்ளது. இதுவே கிரீன்விச் மத்திய (சராசரி) நேரம் என்று அழைக்கப்படுகின்றது.


## கிரீன்விச் ரேகை

லண்டனின் கிரேனிச் நகரத்தினூடாக புவி மேற்பரப்பின் வடமுனையிலிருந்து தெற்கு நோக்கி அமைந்திருக்கும் நிலைக்கோடு இதுவாகும். $0^0$ நெட்டாங்காகக் கருதப்படுகின்ற இந்த ரேகையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு நோக்கி நெட்டாங்குகள் குறிக்கப்படுகின்றன. உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியம நேரக் கணிப்பும் இந்த கிரீன்விச் ரேகையை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்படுகின்றது.

## கிரீன்விச் நேரம்


ஒரு நாடு தனது உள்நாட்டு வேலைகளை உள்நாட்டு நேரப்படி செயற்படுத்தும் அதேவேளை, சர்வதேச மட்டத்திலான நடவடிக்கைகளின்போதும் பிறநாட்டுடன் உள்நாட்டு நேரத்திற்கமைய வேலைகளைத் திட்டமிடும்போதும் பாரிய





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ணிப்பிடப்படுகின்றது





சூரிய கடிகாரம்


கிரேனிச்சில் நியம நேரத்தைக் காட்டி நிற்கும் கடிகாரம்

சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியநிலை ஏற்படலாம். நாடு விட்டு நாடு, கண்டம் விட்டுக் கண்டம் மற்றும் பெரிய கண்டமொன்றில் உள்ள நாடுகளுக்கிடையிலும் இந்த சிக்கல் நிலை தோன்றலாம்.

எனவே, இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்முகமாகவே 'கிரீன்விச் நேரம்' (Greenwich Mean Time-GMT) உருவானது. இது உலகின் எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒரு நேரக்கணிப்பீட்டு முறையாகும். கிரீன்விச் நேரமானது இங்கிலாந்தில்




'கெனடா நாட்டின் சேர்.ஸ்டேன்ஃபோர்ட் ஃப்ளெமிங் என்பவர்தான் முதன்முதலாக உலகம் முழுவதற்குமான நேர வலயத்திட்டத்தை 1876 இல் அறிவித்தார். பூமியில் தெற்கு, வடக்காகச் செல்லும் நெட்டாங்கு கோடுகளில் 15° ஒரு நேரமாகக்கொண்டு, ஒவ்வொரு 15° நிலப்பகுதிக்கும் ஒரு மணிநேரம் வேறுபாடு என்று நிறுவி, உலகம் முழுவதற்குமாக மொத்தம் 24 நேர வலயப் பிரிவுகள் இருக்குமாறு அவர் திட்டமிட்டார்'

'யுனிவேர்சல் டய்ம்' (UT) என்றும் பிரான்ஸில் 'டெம்ப்ஸ் யுனிவர்சல்' (TU) என்றும் ஜேர்மனியில் 'வேல்ட்ஸ்' (WT) என்றும் அழைக்கப்படுகின்றது.

## வலய வேறுபாடு

வலய வேறுபடுத்தலின்போது நெட்டாங்குகளை ஒரே அளவு இடைவெளியில் வேறுபடுத்த முடியவில்லை. அவ்வாறு வேறுபடுத்தப்பட்டால் வட துருவத்திலும் தென் துருவப் பகுதிகளில் உள்ள சில சிறிய நாடுகளிலும் கிழக்கு மற்றும் மேற்கு பிரதேசங்களிலும் நேரம் வித்தியாசப்படும் சிக்கல் இருந்தது.

அவ்வாறே, பெரிய கண்டங்களில் உள்ள நாடுகளின் பாரிய நிலப்பகுதியுடனான பிரதேசங்களுக்குள்ளும் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டன. எனவே, இந்த நிலையைத் தவிர்க்கும் விதத்தில் அத்தகைய நாடுகளை ஒரே வலயத்திற்குள் உள்ளடக்கும் வகையிலான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

## நேர வலயம்

கடிகார நேரமும் கிரீன்விச் நேரத்தை அடிப்படையாகக்கொண்டே அமைக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி, அந்தந்த நாட்டுக்கென நியமிக்கப்பட்ட நேரங்கள் உள்ளன. எனினும், அந்த நேரம் சிலவேளைகளில் சிறிய வேறுபாடுகளுக்கு உட்படுவதும் உண்டு. யார் மௌத் (Yar Mouth) என்ற பிரதேசத்திலுள்ள கடிகார மொன்றை அப்பிராந்தியத்தின் எல்லைக்கு கொண்டு சென்றால், கடிகார நேரம் அரை மணித்தியாலத் தால் வேறுபடுகின்றது. இந்த நேர மாற்றத்தை குறைக்கும் விதத்தில் புவி மேற்பரப்பு 24 வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## நேர வலயத் திட்டம்

பூமியில் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு நேரங்கள் பாவனையில் இருப்பது இயற்கை. இதனை ஒரு சீர்தரப்படுத்தி, உலகம் முழுவதற்கு மான நேரத்தை வரையறை செய்வதே 'நேர வலயத் திட்டம்' ஆகும். கெனடா நாட்டின் சேர்.ஸ்டேன்ஃபோர்ட் ஃப்ளெமிங் என்பவர்தான் முதன்முத லாக உலகம் முழுவதற்குமான நேர வலயத்திட்டத்தை 1876 இல் அறிவித் தார். பூமியில் தெற்கு, வடக்காகச் செல்லும் நெட்டாங்கு கோடுகளில் 15° ஒரு நேரமாகக்கொண்டு, ஒவ்வொரு 15° நிலப்பகுதிக்கும் ஒரு மணிநேரம் வேறுபாடு என்று நிறுவி, உலகம் முழுவதற்குமாக மொத்தம் 24 நேர வலயப் பிரிவுகள் இருக்குமாறு அவர் திட்டமிட்டார்.


அதன்படி, ஒவ்வொரு வலயமும் அதனுடைய அயல் வலயத்தில் இருந்து ஒரு மணிநேரம் வேறுபடுகின்றது. நேரவலயக் கோடுகள் எப்போதும் ஒழுங்காக அமைவதில்லை. காரணம், அவை நாடுகள் அல்லது நிர்வாக கட்டமைப் புகளை மையமாகக்கொண்டு வரை யப்படுகின்றமை ஆகும். 24 வலயங் களிலும் ஒரு வலயத்தில் நிலவும் நேரம் (அந்த வலயத்தின்) நியம நேரமாகக் கொள்ளப்படுகின்றது.

## சர்வதேச நாள் ரேகை

கிரீன்விச் ரேகைக்கு கிழக்காகவும் மேற்காகவும் 180° கணிக்கப்பட்டு சர்வதேச நாள் ரேகை (International Date Line) நிறுவப்பட்டுள்ளது.

ஒருவர் உலகின் பல்வேறு பாகங் களுக்கும் பயணம் செய்வாராயின், அதனால் ஏற்படும் இடைஞ்சல்களை தவிர்க்கும் வகையிலும் அன்றாட அலுவல்களை இலகு படுத்திக்கொள் ளும் நோக்கிலுமே இந்த சர்வதேச நாள் ரேகை குறிக்கப்படுகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாறுதான் நேரம் கணிப்பிடப்படுகின்றது



(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றப்பட்டிருக்கின்றது. அத்துடன், பிரமிக்கத்தக்க கட்டடக்கலைச் சிறப்புமிகு தேவாலயம் உட்பட இன்னும் பல புராதன கட்டடங்களும் இந்த நகரத்தில் அமைந்திருக்கின்றன.

## கிரீன்விச் ஆய்வுகூடம்

கப்பல் போக்குவரத்துக்குத் தேவையான நேர அட்டவணையைத் தயாரிப்பதற்காக சந்திரன் மற்றும் ஏனைய கிரகங்களின் நகர்வு, சஞ்சாரம் என்பன குறித்து கவனம் செலுத்தி ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவே 'கிரீன்விச் ஆய்வுகூடம்' நிறுவப்பட்டது. 1675 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த ஆய்வுகூடம், உலகில் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த ஆய்வுகூடமாகும். லண்டன் மாநகரில் எரியும் மின்விளக்குகளால் இங்கு மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளுக்கு இடைஞ்சல் ஏற்படுகின்ற காரணத்தால், 1946 ஆம் ஆண்டு இந்த நிலையம் சசெக்ஸ் பிராந்தியத்தில் உள்ள 'ஹேர்ஸ்ட் மொன்செயுக்ஸ் கார்ல்' எனும் இடத்துக்கு மாற்றப்பட்டது.

(ஆ)

## நியம நேரம் (Standard Time)

நியம நேரம் என்பது வலயத்தின் மத்திய ரேகைக்கு நடுவில் உள்ள. சூரியன் அந்த வலயத்தின் எல்லையை வந்தடைவதற்கு எடுக்கும் நேரம் ஆகும். இந்த நேரம் சூரியனின் நியம நேரத்தில் இருந்து அரை மணித்தியாலம் வரை வேறுபாடுடையதாக அமைகின்றது. இதனால்தான் சூரிய கடிகாரமும் பொதுவான கடிகாரமும் ஒரே நேரத்தைக் காட்டுவதாக அமைந்திருப்பதில்லை. இது சூரிய கடிகாரத்தில் நிகழும் மாற்றத்தாலேயே ஏற்படுகின்றது.

## நாளொன்றின் ஆரம்பம்

நாளொன்றின் ஆரம்பம் சூரியன் உச்சிக்கு வருகின்ற நேரமாகிய நண்பகல் 12 மணியிலிருந்தே ஆரம்பமாகின்றது எனக்கொள்ளப்பட்டாலும், மக்களின் அன்றாட நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு நாளொன்றின் ஆரம்பம் நள்ளிரவு 12.00 மணியிலிருந்து ஆரம்பமாவதாகக்கொள்வது சிறந்ததாக அமையும் என 1922 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச சோதிடவியலாளர்களின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

## வரலாற்றில் கிரேனிச் நகரம்

கி.பி 918 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட ஆவணமொன்றில் கிரேனிச் நகரம் 'க்ரோன்விச்' (Gronwich) என்ற பெயரிலேயே பதிவாகியிருக்கின்றது. கி.பி 1011-1014 வரையில் இந்நகரம் ஒல்லாந்தரின் கப்பல் போக்குவரத்தின் மத்தியநிலையமாக இருந்து வந்துள்ளது. 'பெலேடியன்' என்ற கட்டடக்கலை நுட்பத்திற்கமைய இங்கிலாந்தில் முதன்முதலில் நிர்மாணிக்கப்பட்ட ராணி மாளிகையும் (Queen's House) அமைந்திருப்பது இந்நகரத்தில் ஆகும். இன்று அந்த மாளிகை ஓர் அரும்பொருட்காட்சியகமாக



ராணி மாளிகையின் உட்புறத் தோற்றம்



கிரீன்விச் ஆய்வுகூடம்



கிரேனிச் நகரில் அமைந்துள்ள ராணி மாளிகை எனும் அரும்பொருட்காட்சியகம்

## கிரீன்விச் நேரத்தை அடிப்படையாகக்கொண்டு உலக நாடுகளில் பயன்பாட்டிலுள்ள நேரம்

| நாடு | நகரம் | கிரீன்விச் ரேகை | நேரம் (GMT) |
|---|---|---|---|
| ஐ.அரபு ராச்சியம் | அபுதாபி | +4 | 16.00 |
| நெதர்லாந்து | ஆம்ஸ்டடேம் | +1 | 13.00 |
| அலஸ்கா | என்வோரேஜ் | -10 | 02.00 |
| மேற்கிந்திய தீவுகள் | என்டிகுவா | +4 | 08.00 |
| கிறீஸ் | எதன்ஸ் | +2 | 14.00 |
| நியூசிலாந்து | சவுத்லன்ட் | +12 | 24.00 |
| ஈராக் | பக்தாத் | +3 | 15.00 |
| பஹ்ரைன் | பஹ்ரைன் | +4 | 16.00 |
| தாய்லாந்து | பெங்கொங் | +7 | 19.00 |
| லெபனான் | பெய்ரூட் | +2 | 14.00 |
| கொலம்பியா | பொகோடா | -4 | 08.00 |
| இந்தியா | மும்பாய் | +51/2 | 17.30 |
| ஐ.அமெரிக்கா | பொஸ்டன் | -5 | 7.00 |
| பெல்ஜியம் | பிரசல்ஸ் | +1 | 13.00 |
| ஹங்கேரி | புடாபெஸ்ட் | +1 | 13.00 |
| எகிப்து | கெய்ரோ | +2 | 14.00 |
| வெனிசுவெலா | கெரகாஸ் | -4 | 08.00 |
| அமெரிக்கா | சிகாகோ | -6 | 06.00 |
| இலங்கை | கொழும்பு | +51/2 | 17.00 |
| டென்மார்க் | கொபன்ஹெகன் | +1 | 13.00 |
| பங்களாதேஷ் | டாக்கா | +6 | 18.00 |
| சிரியா | டமஸ்கஸ் | +2 | 14.00 |
| அவுஸ்திரேலியா | மெல்போர்ன் | +10 | 22.00 |
| சவுதி அரேபியா | தெஹ்ரான் | +3 | 15.00 |
| உகண்டா | திரிபோலி | +3 | 15.00 |
| ஜேர்மனி | ஃப்ரென்க்பர்ட் | +1 | 13.00 |
| கயானா | ஜோர்ஜ் டவுன் | -3 | 09.00 |
| ஹொங் கொங் | ஹொங் கொங் | +8 | 20.00 |
| ஹவாய் | ஹொனாலுலு | -10 | 02.00 |
| துருக்கி | இஸ்தான்புல் | +3 | 15.00 |
| பாகிஸ்தான் | கராச்சி | +5 | 17.00 |
| சூடான் | கனர்டொயும் | +2 | 14.00 |
| ஜமெய்க்கா | கிங்ஸ்டன் | -5 | 07.00 |
| மலேசியா | கோலாலம்பூர் | +8 | 20.00 |
| குவைட் | குவைட் | +3 | 15.00 |
| ரஷ்யா | பீட்டர்ஸ்பேர்க் | +2 | 14.00 |
| இங்கிலாந்து | லண்டன் | 0 | 12.00 |
| செம்பியா | லுசாகா | +2 | 14.00 |
| மெக்சிகோ | மெக்சிகோ | -6 | 06.00 |
| கெனடா | மொன்ட்ரியல் | -5 | 07.00 |
| பிலிப்பைன்ஸ் | மெனிலா | +8 | 20.00 |
| அமெரிக்கா | நியூயோர்க் | -5 | 07.00 |
| ஜப்பான் | ஒசாகா | +9 | 21.00 |
| பிரான்ஸ் | பெரிஸ் | +1 | 13.00 |
| செகொஸ்லோவேகியா | பிராக் | -1 | 13.00 |
| மியன்மார் | ரங்கூன் | +61/2 | 18.00 |
| இத்தாலி | ரோம் | +1 | 13.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோருக்கு சிறுவர்கள் பற்றி அறிவூட்டல்

**அபிலாஸ், அரவிந்த், மயூரி மூவரும் ஊரில் பிரபல்யம் பெற்ற பிள்ளைகள். இவர்கள் ஊரில் உள்ள எல்லோருக்கும் உதவி செய்து வருவதால் இச்சிறுவர்களுக்கு ஊராரும் உதவிகளைச் செய்துவந்தனர். சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காக ஊர் சிறுவர்கள் இணைந்து சிறுவர் கழகமொன்றை ஏற்படுத்தினர். இந்த சிறுவர் கழகம் சார்பாக கூட்டங்களைக் கூட்டினர். பெரியவர்களும்கூட இந்தக் கூட்டங்களில் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர். அதனால், சிறுவர் துஷ்பிரயோகம், துன்புறுத்தல்களைத் தடுத்து நிறுத்த இந்த சிறுவர் கழகங்கள் முக்கியமானவை என்பதை பெரியோர்கள் புரிந்து கொண்டனர்.**

"நாங்கள் எமது சிறுவர் கழகத்தின் ஊடாக சிறுவர் துன்புறுத்தல், துஷ்பிரயோகம் என்றால் என்ன என்பதை



ஊராருக்கு சொல்லிக் கொடுப்போமா?" என்று ஒருநாள் அபிலாஸ் கேட்டான்.

"ஆம். அது நல்ல யோசனைதான். ஆனால், நமது ஊராருக்கு சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்னவென்றே தெரியவில்லையே" என்று அரவிந்த் கூறினான்.

"அப்படி சொல்லிக் கொடுப்பதாயின் எதைப் பற்றி அவர்கள் முன் பேசுவதென்பதை நாம் தீர ஆலோசிப்போம் என்றும் அதை நாம் உரிய முறையில் புரிய வைக்காவிட்டால் நஷ்டம் எமக்கே" என்றும் மயூரியும் ஓர் ஆலோசனையைக் கூறினாள்.

"முதலில் நாம் தெரியப்படுத்த வேண்டிய விடயம் தகுந்த காரணம் இல்லாமல் பிள்ளைகளை அடிக்கக் கூடாது என்பதையும் அவ்வாறு அடிப்பதனால் அவர்கள் தவறு செய்தார்களா? இல்லையா? என்பதை நன்கு அறிந்து கொண்டபின்னரே அடிக்க வேண்டும் என்பதையும் சொல்லி வைக்கவேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் அடிப்பதைவிட அன்பு வார்த்தைகளைக் கூறி அவர்களை நல்வழிப்படுத்துவதே சிறந்தது என்பதையும் தெரியப்படுத்தவேண்டும்" என்று மயூரி யோசனை கூறினாள்.

"ஆம் அது நல்லது. வேறு என்ன கூறவேண்டும்? அதுமட்டுமல்ல. சிறுவர்களைப் படி, படி என்று மட்டும் கூறித் தொந்தரவு செய்யாமல் அவர்களை விளையாடவும் அனுமதிக்க வேண்டும் என்பதையும் சொல்லி வைக்க வேண்டும்" என்று அரவிந்த் கூறினான்.



"உங்களுக்கு நினைவிருக்கிறதுதானே. அரவிந்த் அண்ணாவும் கொஞ்சக் காலம் எங்களோடு விளையாட முடியாமல் இருந்தது" என்று மயூரி ஞாபகப்படுத்திச் சிரித்தாள்.

"ஆம் மயூரி.. அந்தக் காலம் நான் மிகவும் கஷ்டப்பட்ட காலம்தான்" என்று அரவிந்த் பதில் கூறினான்.

"இப்போது உங்களுக்கு முடியும் தானே சிறார்கள் (குழந்தைகள்) விளையாடுவதைத் தடுத்தால் அவர்களின் மனதில் எந்தளவு வேதனை ஏற்படும் என்பதை அம்மாக்களுக்கும் அப்பாமார்களுக்கும் சொல்லி வைக்க" என்று மயூரி அரவிந்திடம் கேட்டான்.

"அது நல்ல விடயம்தான். சிறார்களை விளையாடவிடாது தடுத்துவிடும்போது ஏனைய சிறார்கள் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அது எவ்வளவு வேதனையை ஏற்படுத்தும் என்பதை அரவிந்த் அண்ணாதான் அறிவார்" என்று அபிலாஸ் கூறினான்.




"அதேபோல சிறுவர்கள் வீட்டில் அம்மா, அப்பாவுக்கு உதவியாக சிறுசிறு வேலைகளைச் செய்வது சிறுவர் துஷ்பிரயோகம் அல்ல என்பதையும் புரிய வைக்க வேண்டும்" என்று மயூரி ஆலோசனை கூறினாள்.

"சரி... சரி அப்பாடியானால் நாம் வேலையை ஆரம்பிப்போம்" என மூவருமாகத் தீர்மானித்தனர். இவை வெறும் பேச்சளவில் மட்டும் நிகழவில்லை.

ஒருநாள் சிறுவர் கழக அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் துன்புறுத்தல் என்றால் என்ன? என்பது தொடர்பாக பெரியவர்களுக்கு சொல்லிக்கொடுத்து விரிவுரையொன்றை நடத்தினர். அனைவரும் ஆச்சரியத்தோடு சிறுவர்களை வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தனர்.

நாம் இவ்வளவு வளர்ந்தும்கூட இதுவரையில் ஒருபோதும் அறிந்திராத விடயங்களை இந்த சின்ன சுட்டிப் பிள்ளைகள் அறிந்து வைத்துள்ளனரே என்று பெரியவர்கள் ஆச்சரியப்பட்டனர்.



இறுதியில் கூட்டத்திற்கு வந்த அனைவரும் சிறுவர்களை எப்படி பராமரிக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டவர்களாக வெளியேறினர்.

"நாம் சில நேரங்களில் குழந்தைகளை அடிக்கிறோம். அப்போது அவர்களது மனம் எப்படி வேதனைப்பட்டிருக்கும்" என்று கவலையோடு சில அம்மா அப்பாக்கள் பேசிக்கொண்டு சென்றனர்.

"ஆம் அது உண்மைதான். நான் இனிமேல் எனது குழந்தைகளை அடிக்கமாட்டேன். அன்பு வார்த்தைகளால் திருத்துவேன். எனது குழந்தை சிறுவர் கழகத்தில் சேர்ந்த பின்னர் முன்னர் இருந்த நிலையைவிட மிகவும் நல்லமுறையில் பண்பட்டிருக்கின்றது. வீட்டில் வேலைகள் செய்கின்றது. நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கின்றது. முன்னைவிட எனக்கு உதவி புரிகின்றது. நமக்கு அவர்கள்மீது கடமை இருப்பது போன்றே பொறுப்பும் இருக்கின்றது என்பதை நாம் முன்னர் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. இப்போது எனது குழந்தை பற்றி எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது" என்று ஓர் அம்மா கூறினார்.

இந்த கூட்டம் நல்லமுறையில் வெற்றிகரமாக முடிந்ததையிட்டு அரவிந்த், அபிலாஸ், மயூரி மூவரும் பெரும் மகிழ்ச்சியடைந்தனர். சிறுவர் கழகம் இந்தளவு வெற்றியடையக் காரணம் அதில் உள்ள எல்லோரதும் கூட்டு ஒத்துழைப்புத்தான் என்பதை நன்கு புரிந்துகொண்டனர்.

நாம் ஒன்று சேர்ந்து நம் ஊரைத் திருத்துவோம். நமது ஊர் திருந்தியதும் எல்லோரும் சேர்ந்து அடுத்த ஊரையும் திருத்துவோம். நம்மை அறியாமல் நம் நாடும் நல்ல நிலையை அடையும்

"ஆஹா... அது எவ்வளவு நல்ல காரியம். நம் போன்ற சிறார்கள் நாட்டு நலனில் பங்காளிகள் ஆக முடியும் என்றால்...." அரவிந்த் கூறினான்.

"நம்மால் முடியாதது எதுவும் இல்லை" என்று அபிலாஸ் சிரித்துக்கொண்டே கூறினான்.

*(ஊரில் இவர்கள் ஏற்படுத்திய இன்னும் சில மாற்றங்கள் அடுத்த இதழில்...)* (ஆ)

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3495
யோ.சுகிர்தா, தரம் - 5, ஸ்ரீ சண்முகா இ.ம.கல்., திருகோணமலை.


அங்.இல: 3496
சி.யதுர்சன், தரம்-11, யாழ்.இ.கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3497
தே.கார்த்தீபன், தரம் - 9C, ஹாட்லிக் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3498
யோ.குணாகரன், தரம் - 9, யா/குடத்தனை ம.த.ம.வித்., குடத்தனை.


அங்.இல: 3499
எம்.றிஸ்வி, தரம் - 10C, தே.பாட., சம்மாந்துறை.


அங்.இல: 3500
சு.கிருஸ்ணா, தரம் - 8, புந்தோட்டம் ம.வித்., வவுனியா.


அங்.இல: 3501
எஸ்.எம்.சமீர், தரம் - 5, அல்-அஸ்ஹர் மு.வித்., ஹெம்மாதகம.


அங்.இல: 3502
ரா.ஜெகதீஸ்வரன், உயர் தரம் (கலை), மன்/நானாட்டான் ம.வித்., நானாட்டான்.


அங்.இல: 3503
செ.தினுக்குமார், தரம் - 8, யாழ்.கொக்குவில் இ.கல்., கொக்குவில்.


அங்.இல: 3504
எம்.ருஸ்தி, தரம் - 9A, மட்/அந்-நூர் தே.பாட., [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திஹாரிய, அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவின் 2010ஆம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த மாதம் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. மல்லிகை, ரோஜா, ஓர்கிட், தாமரை ஆகிய நான்கு இல்லங்களுக்கிடையிலான இப்போட்டியில் மல்லிகை இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது. விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த அதிதிகள் சிலரையும் தேகாப்பியாசத்தில் பங்கேற்ற மாணவிகள் சிலருடன் பாடசாலை வாத்தியக்குழு மற்றும் மாணவர் அணிவகுப்பு என்பனவற்றையும் படங்களில் காணலாம்.

(படமும் தகவலும் : ஆர்.எம்.முனாஃப்)



மீரிகம, கள்-எலியவைச் சேர்ந்த நபீல்-ஸாரா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஸாதிர் அஹமட், 19.03.2010 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : மொஹமட் நிபால்)



## கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு



எஸ்.ரிஷாந்த், தரம் - 4A, க/ரஜவெல்ல இ.தே.கல்., ரஜவெல்ல.



க.ரகுவரன், தரம் - 7E, கதிரேசன் ம.கல்., கண்டி.



எம்.பஹ்மி, தரம் - 1A, களு/அளுத்கம வீதிய மு.ம.கல்., தர்ஹா நகர்.




ஏ.எச்.எம்.பயாஸ், தரம் - 9, மடிகே அனுக்கன மு.ம.வித்., ஹெட்டிபொல.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### கோழியும் குஞ்சும்



தே.சிவாகரன், தரம் - 10, ஸ்கந்தவரோதயாக் கல்., உடுவில்.

### வாத்து



மா.நாகதர்சிகன், தரம் - 3, வட்டு/திருநாவுக்கரசு ம.வித்., வட்டுக்கோட்டை.



எஃப்.நஜீலா, தரம் - 5A, பாத்திமா பாலிகா மு.ம..வித்., கண்டி.



எம்.ஐ.எஃப்.ரிப்லா, தரம் - 5A, கெகுணகொல்ல தே.பாட., கெகுணகொல்ல.


### கப்பல்



எம்.எஸ்.எம்.ரஹ்மதுல்லா, தரம் - 8D, ஸாஹிரா தே.பாட., மாத்தளை.





எம்.என்.எஃப்.மபாதா, தரம் - 7A, மாறை/ஸாஹிரா கல்., வெலிப்பிட்டிய.



ச.சாமினா, தரம் - 6A, வ/பிரமண்டு வித்., தாண்டிக்குளம்.


### அன்னாசி



ந.பிரணவிகா, தரம் - 2, பது/ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்., லுணுகலை.



ஆதில் அஹ்மது, தரம் - 3, மாறை/ஸாதாத் ம.வித்., கொடபிடிய.



எம்.அல்தாப், தரம் - 5, க/ஜாமியுல் அஸ்ஹர் ம.கல்., உடத்தலவின்ன மடிகே.

### கடற்கரைக் காட்சி




எஃப்.மின்ஹா, தரம் - 10, மட்/மீரா பாலிகா ம.வித்., காத்தான்குடி-06.



எம்.றம்ஸான், தரம் - 11, கொடேகொட மு.வித்., ஹெம்மாதகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் அறிவுரை



பூங்குடி ஒரு பெரிய கிராமம். அவ்வூரின் அரச பாடசாலையில் புதிய ஆய்வகக் கட்டட திறப்புவிழா நடைபெற ஏற்பாடாகி இருந்தது. அந்த விழாவிற்கு பிரதம அதிதியாக கல்வி அதிகாரி வருகை தருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதே சமயம் ஊரில் இரண்டு பெரிய மனிதர்கள் சிறப்பாக அழைக்கப்பட்டிருந்தனர். ஒருவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் குணசேகரன். மற்றவர் ஊர் பெரியவர் புலிப் பாண்டியன்.

விழா தொடங்கியது. கல்வி அதிகாரி சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மேடையில் ஆசிரியர் குணசேகரன், செல்வந்தர் புலிப்பாண்டியன் இருவரும் அமர்ந்திருந்தனர்.

"ஊர்ப் பெருமக்களே! நான் இன்று கல்வி அதிகாரியாக இருந்தாலும் இந்தப் பூங்குடியில் பிறந்தவனே! என் தந்தை தான் புலிப்பாண்டியன். என்னுடைய ஆசிரியர் தான் குணசேகரன். அவர்களால் [illegible]ன நான் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறேன்" என்று அவர் பேசியதும் கூடியிருந்த மக்கள் கரவொலி எழுப்பினர். அதேசமயம் குணசேகரனும் புலிப்பாண்டியனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அந்தப் பார்வைகளில் பழைய நிகழ்ச்சி ஒன்று படம் போல் ஓடத் தொடங்கியது.

பூங்குடியில் புலிப்பாண்டியன் ஒரு வித்தியாசமானவர். அவருடைய மகன் பாண்டியராசன் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அவனை திடீரென்று பாடசாலைக்குச் செல்ல விடாமல் தடுத்துவிட்டார். சில நாட்கள் வராத பாண்டியராசனைப் பற்றி விசாரிக்க ஆசிரியர் குணசேகரன் புலிப்பாண்டியன் வீட்டிற்கு வந்தார்.

புலிப்பாண்டியன் வீட்டில் கம்பீரமாக உட்காந்திருந்தார். தன்னுடைய பெரிய மீசையை திருகியவாறு, "என்ன வாத்தியாரே? ஏது இந்தப் பக்கம்" என்று புலிப்பாண்டியன் கேட்டார்.

"உங்களைப் பார்க்கத்தான் வந்தேன் ஐயா" என்று குணசேகரன் பணிவுடன் கூறினார்.

இருவருக்கும் ஒரே அளவு வயதுதான் இருக்கும். இருந்தாலும் ஆசிரியர் பணிவன்புடன் பேசினார். "நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். பாண்டியராசன் இனிமேல் படிக்க வரமாட்டான்"

"ஏன் ஐயா?"

"எங்கள் வீட்டு வேலையாள் ஓடி விட்டான். அதனால், பாண்டியராசன் மாடு மேய்க்கப் போகிறான். நான் மற்ற வேலைகளைப் பார்க்கிறேன்"

"ஐயோ! பாண்டியராசன் மிகவும் நன்றாகப் படிப்பவன். எதிர்காலத்தில் நல்ல நிலைக்கு வந்து விடுவான். அவனை மாடு மேய்க்க விடக்கூடாது ஐயா!"

"அப்படியரனால் நீங்கள் வாருங்கள் வாத்தியாரே அல்லது வேறு யாரையாவது ஏற்பாடு செய்யுங்கள்! என் மகன் என் சொல்படிதான் கேட்க வேண்டும் எனக்குத் தான் உதவ வேண்டும். தெரியுமா?"

"நீங்கள் சொல்வததெல்லாம் சரி தான் ஐயா! படிக்க வேண்டிய வயதில் மாடு மேய்க்க அனுப்பக்கூடாது!"

"நான் ஒருவகுப்புக் கூடப் படிக்கவே இல்லை ! நான் என்ன கெட்டுப் போய் விட்டேனா? என்னைவிட என் மகன் படிக்க வேண்டும் என்பது கட்டாயமா வாத்தியாரே?" என்று புலிப்பாண்டி கேட்டார்.

"ஐயா! இரண்டாயிரம் வருடத்திற்கு முன் வாழ்ந்த வள்ளுவரே சொல்லியிருக்கிறார்!"

"என்ன சொல்லி இருக்கிறார்?"

'தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது!'

"அப்படியானால் என்ன வாத்தியாரே?"

"தன்னை விடத் தன் பிள்ளை நன்றாகப் படிப்பதுதான் உலக மக்களுக்கு இனிமையைத் தரும் என்று வள்ளுவர் சொல்லி இருக்கிறார். நாம் படிக்கவில்லை என்பதற்காக நம் பிள்ளைகள் படிக்கக்கூடாது என்று தடுக்கக்கூடாது" என்று குணசேகரன் விளக்கினார்.

"வாத்தியாரே நீங்கள் சொல்வதற்காக இல்லை என்றாலும் வள்ளுவர் சொன்னதற்காக என் மகனைப் படிக்க அனுப்புகிறேன். என் தந்தை நிறையத் திருக்குறள் படித்தவர் அவரைப் போல் நான் படிக்காமல் ஊர் சுற்றித் திரிந்துவிட்டேன். நீங்கள் சொல்வது என் தந்தையும் வள்ளுவரும் சொல்வது போல் இருக்கிறது. நாளைக்குப் பாண்டியராசன் படிக்க வருவான். வேறு வேலையாளுக்கு ஏற்பாடு செய்யும் வரை நானே மாடு மேய்க்கப் போகிறேன்!" என்று மீசையை மீண்டும் முறுக்கினார். குணசேகரன் கும்பிடுபோட்டுப் புறப்பட்டார்.

பழைய நிகழ்ச்சி படம் போல ஓடி முடித்தவேளை பிரதம ஆசிரியரான கல்வி அதிகாரி பாண்டியராசன் இரு மாலைகளைக் கொண்டு வந்து தந்தைக்கும் ஆசிரியருக்கும் அணிவித்து வணங்கினார். "மகனே! நீ ஊருக்கும் நாட்டுக்கும் நன்றாக உழைக்க வேண்டும்!" என்று புலிப்பாண்டியன் மகிழ்வுடன் கூறினார்.

# இளவரசனுக்கு வழங்கப்பட்ட கொடூர தண்டனை






மரணமற்ற கஷேய் தனது குதிரையில் பாய்ந்து சென்று விரட்டி இளவரசன் இவானைப் பிடித்தான், "இந்த முதல் தடவை உன்னை நான் மன்னிக்கிறேன். ஏனெனில், நீ என்னிடம் அன்பாக இருந்தாய், குடிக்க நீர் கொடுத்தாய். இரண்டாவது தடவையும் உன்னை மன்னிப்பேன், ஆனால், மூன்றாவது தடவை உன்னைத் துண்டம் துண்டமாக வெட்டுவேன்" என்றான்.

அவனிடமிருந்து மாரியா மரெவ்னாவைத் தூக்கிக்கொண்டு சென்றான். இதனால் இளவரசன் இவான் சாலையோரத்தில் ஒரு கல்லின்மீது வேதனையுடன் அமர்ந்தான். பின்னர் மறுபடியும் மாரியா மரெவ்னாவிடம் சென்றான். இந்த முறையும் முன்னர் போலவே மரணமற்ற கஷேய் வெளியே போயிருந்தான்.

"என்னுடன் வந்துவிடு மாரியா மரெவ்னா"

"ஓ, இளவரசன் இவான், அவன் நம்மைத் திரும்பவும் விரட்டிப்பிடித்து விடுவான்"

"பரவாயில்லை. குறைந்தது ஒன்றிரண்டு மணி நேரமாவது நாம் சேர்ந்திருக்கலாம்"

அவர்கள் மீண்டும் குதிரையில் தப்பிச்சென்றார்கள். அப்போது மரணமற்ற கஷேய் தன் இருப்பிடம் நோக்கித் திரும்ப, அவனது சிறந்த குதிரை தள்ளாடியது.

"நோஞ்சான் குதிரையே,மீண்டும் ஏன் தள்ளாடுகிறாய்? ஏதாவது துரதிர்ஷ்டத்தை உணர்கின்றாயா?" எனக் கேட்டான்.

"இளவரசன் இவான் மீண்டும் வந்து மாரியா மரெவ்னாவைத் தன்னுடன் தூக்கிப் போய்விட்டான்" என்றது குதிரை.

"நாம் அவர்களைப்பிடிக்க முடியுமா?"

"நாம் பார்லி விதைத்து, அது முற்றும்வரை காத்திருந்து, அறுவடை செய்து, அடித்து, அதிலிருந்து பீர் இறக்கிக் குடித்து நன்றாகத் தூங்கிப்போகும்வரை காத்திருக்காமல் தற்போது பின்தொடர்ந்தால் நம்மால் அவர்களைப் பிடிக்கமுடியும்"

மரணமற்ற கஷேய் தனது குதிரையில் விரட்டிச் சென்று இளவரசன் இவானை மீண்டும் பிடித்தான். "நீ மாரியா மரெவ்னாவை ஒருபோதும் பார்க்கமுடியாது என்று நான் உன்னிடம் முன்னர் கூறினேன். மறந்துவிட்டாயா?"

கஷேய் மாரியா மரெவ்னாவை மீண்டும் இவானிடம் இருந்து தூக்கிச் சென்றான். இளவரசன் இவான் மறுபடியும் தனிமையில் விடப்பட்டான். வேதனையுடன் மீண்டும் மாரியா மரெவ்னாவிடம் சென்றான். முன்னர் போலவே இந்த முறையும் மரணமற்ற கஷேய் வெளியே போயிருந்தான்.

"என்னுடன் வந்துவிடு மாரியா மரெவ்னா"என்றான் இளவரசன் இவான்.

"ஓ, இளவரசன் இவான், இந்தமுறை அவன் நம்மைப் பிடித்தால், உன்னைத் துண்டம் துண்டமாக வெட்டுவான்"

"பரவாயில்லை! நீ இன்றி என்னால் வாழமுடியாது."

மீண்டும் அவர்கள் குதிரையில் தப்பிச் சென்றார்கள். இதேவேளை, மரணமற்ற கஷேய் தன் இருப்பிடம் நோக்கித் திரும்ப, அவனது சிறந்த குதிரை தள்ளாடியது.

"ஏன் தள்ளாடுகிறாய் குதிரையே? ஏதேனும் துரதிர்ஷ்டத்தை உணர்கின்றாயா?" எனக் கேட்டான்.

"இளவரசன் இவான் மூன்றாவது முறையாகவும் மாரியா மரெவ்னாவைத் தன்னுடன் தூக்கிப்போய் விட்டான்"

மரணமற்ற கஷேய் தன் குதிரையில் இளவரசன் இவானைப் பின் தொடர்ந்து சென்று, அவனைப் பிடித்துத் துண்டம் துண்டமாக வெட்டினான். கீல் பூசப்பட்ட பீப்பாய்க்குள் அத்துண்டுகளைப் போட்டு, இரும்பு வளையங்களால் பீப்பாயைக் கட்டி கடலுக்குள் வீசினான். மாரியா மரெவ்னாவைத் திரும்பவும் தன்னுடன் தூக்கிச் சென்றான்.

இதேநேரத்தில் தனது மைத்துனர்களிடம் இளவரசன் இவான் விட்டுச் சென்ற வெள்ளிப் பொருட்கள் கறுத்து ஒளி குன்றின.

"ஓ... இளவரசன் இவானுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டிருக்க வேண்டும்" என்றனர் மைத்துனர்கள்.

உடனே அவர்களில் ஒருத்தரான கழுகு நீலக் கடலுக்குள் மூழ்கி, பீப்பாயைக் கைப்பற்றிக் கரைக்குத் தூக்கி வந்தது. உயிர் நீரைத் தேடி ராஜாளியும் சாவு நீரைத் தேடி அண்டங்காக்கையும் புறப்பட்டன. அவற்றிற்காகக் கழுகு காத்துக்கொண்டிருந்த இடத்திற்கு இரண்டும் மீண்டும் பறந்து வந்தன. அவை பீப்பாவை உடைத்து, துண்டம் துண்டமாக வெட்டப்பட்டுக் கிடந்த இளவரசன் இவானுடைய உடலை எடுத்துக் கழுவி ஒன்று சேர்த்து முறையாக அடுக்கி வைத்தன.

அண்டங்காக்கை சாவு நீரைத் துண்டுகளின் மீது தெளிக்க, அவை விரைந்து ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டன. பின்னர் அவற்றின் மீது ராஜாளி உயிர் நீரைத் தெளிக்க, இளவரசன் இவான் துடுக்குற்று உயிர்பெற்று எழுந்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் கமலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**අම්මා: ආ... පුතා ආවාද? පුතාට මහන්සිද?**
ஆ.... புதா ஆவாத? புதாட மஹன்சித?
அம்மா: ஆ... மகன் வந்துவிட்டீர்களா? மகனுக்கு களைப்பாய் இருக்கிறதா?

**කමල්: නැහැ අම්මේ. ඒ තරම් මහන්සියක් නැහැ.**
நெஹெ அம்மே. ஏ தரம் மஹன்சியக் நெஹெ.
கமல்: இல்லை அம்மா. அந்தளவு களைப்பு இல்லை.

**අම්මා: පුතා ආවේ මොකෙන්ද? දුම්රියෙන්ද? බස්රියෙන්ද?**
புதா ஆவே மொகென்த? தும்ரியென்த? பஸ்ரியென்த?
அம்மா: மகன் எப்படி வந்தீர்கள்? புகையிரதத்திலா? பஸ் வண்டியிலா?

**පුතා: දුම්රියෙන් අම්මේ. දුම්රිය හරිම පහසුයි.**
தும்ரியென் அம்மே. தும்ரிய ஹறிம பஹசுய்.
மகன்: புகையிரதத்தில் அம்மா. புகையிரதத்தில் வருவது இலகு.

**අම්මා: ඉතින් පුතාට කන්තෝරුව හොඳද?**
இதின் புதாட கந்தோருவ ஹொந்தத?
அம்மா: இனி மகனுக்கு அலுவலகம் பிடித்திருக்கின்றதா?

**කමල්: ඔව් අම්මේ හරි හොඳයි.**
ஒவ் அம்மே ஹரி ஹொந்தய்.
கமல்: ஆம் அம்மா மிகவும் நல்லது.

**අපේ අධ්‍යක්ෂ මහතාත් හොඳයි.**
அபே அத்யக்ஷ மஹதாத் ஹொந்தய்.
எங்கள் பணிப்பாளரும் நல்லவர்.

**මට වැඩ පුහුණු කරන ප්‍රධාන ලිපිකරුත් හරිම කරුණාවන්තයි.**
மட வெட புஹுனு கறன பிரதான லிபிகருத் ஹரிம கருணாவந்தய்.
எனக்கு வேலை சொல்லித் தருகின்ற பிரதான லிகிதரும் மிக்க கருணையுடையவர்.

**අම්මා: එහෙනම් හොඳයි. පුතා තේ බොනවාද?**
எஹெனம் ஹொந்தய். புதா தே பொனவாத?
அம்மா: அப்படியென்றால் நல்லது. மகன் தேநீர் குடிக்கின்றீர்களா?

**කමල්: හොඳයි අම්මා.**
ஹொந்தய் அம்மா.
கமல்: நல்லது அம்மா.

## பயிற்சி

**கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. පුතාට...................
2. මම.................... ආවා.
3. දුම්රිය...................... පහසුයි.
4. ........... හරි හොඳයි.
5. ප්‍රධාන ලිපිකරු.......................






இறந்தகால தனி வாக்கியம் (Past Simple Tense) மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் (Present Simple Tense) ஆகிய இரண்டு வகை வாக்கியங்களிலும் காணப்படுகின்ற எதிர்மறை நிலையில் (Negative) உள்ள வாக்கியங்களை இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

| Past Simple Tense<br>இறந்தகால தனி வாக்கியம் | Present Simple Tense<br>நிகழ்கால தனி வாக்கியம் |
|---|---|
| (அ) I did not go.<br>நான் போகவில்லை. | (ஆ) I do not go.<br>நான் போவதில்லை. |
| (இ) You did not travel.<br>நீ பயணிக்கவில்லை. | (ஈ) You do not travel.<br>நீ பயணிப்பதில்லை. |
| (உ) We did not drink.<br>நாங்கள் குடிக்கவில்லை. | (ஊ) We do not drink.<br>நாங்கள் குடிப்பதில்லை. |
| (எ) They did not take.<br>அவர்கள் எடுக்கவில்லை. | (ஏ) They do not take.<br>அவர்கள் எடுப்பதில்லை. |

(அ) I did not go to the cinema yesterday.
நான் நேற்று சினிமாவுக்குப் போகவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) I do not go to the cinema everyday.
நான் ஒவ்வொரு நாளும் சினிமாவுக்குப் போவதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(இ) You did not travel by train yesterday.
நீ நேற்று ரயில் மூலம் பயணிக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) You do not travel by train everyday.
நீ ஒவ்வொரு நாளும் ரயில் மூலம் பயணிப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(உ) We did not drink coffee yesterday morning.
நாங்கள் நேற்றுக் காலை கோப்பி குடிக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஊ) We do not drink coffee every morning.
நாங்கள் ஒவ்வொரு காலையிலும் கோப்பி குடிப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(எ) They did not take medicine yesterday.
அவர்கள் நேற்று மருந்து உட்கொள்ளவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஏ) They do not take medicine everyday.
அவர்கள் ஒவ்வொரு நாளும் மருந்து உட்கொள்வதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(ஐ) These children did not play here yesterday.
அந்தச் சிறுவர்கள் நேற்று இங்கே விளையாடவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஒ) These children do not play here everyday.
அந்தச் சிறுவர்கள் ஒவ்வொரு நாளும் இங்கே விளையாடுவதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பெட்மேன்' கார்ட்டூன் எவ்வாறு உருவானது?



இளம்பராயத்தினர் தொலைக்காட்சியில் மிகவும் விரும்பி ரசிக்கின்ற படம்தான் 'பெட்மேன்' (Batman) படமாகும். 'பெட்மேன்' கார்ட்டூன் திரைப்படங்களும் தற்போது ஒளிபரப்பாகி வருகின்றன. இத்தகைய 'பெட்மேன்' கார்ட்டூன் திரைப்படமானது எவ்வாறு உருவானது தெரியுமா?






அமெரிக்காவின் மாதாந்த சஞ்சிகையொன்றில் தொடராகப் பிரசுரமாகி வந்த ஒரு தொடர் சித்திரக்கதையாகவே 'பெட்மேன்' கதை இருந்தது. மேற்படி, 'பெட்மேன்' சித்திரக் கதையை வரைந்தவர் 'பொபிகேன்' என்பவராவார். அமெரிக்காவைச் சேர்ந்த இவர் ஒரு சித்திரக் கலைஞராவார்.

1938 ஆம் ஆண்டில் 'சுப்பர் மேன்' எனப்படும் சித்திரக்கதை மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த சமயத்தில், பொபிகேன் ஒரு கார்ட்டூன் கலைஞர் என்ற வகையில் வேறு கார்ட்டூன்களையும் வரைந்து கொண்டுதான் இருந்தார். சுப்பமேன் வெளியிடப்பட்டு ஒரு வருடம் கடந்திருந்த நிலையில் அவர் தொழில் பார்த்து வந்த 'DC கொமிக்ஸ்' என்ற நிறுவனத்திற்கு 'சுப்பர் மேன்' போலவே வேறொரு வீர, தீரம் மிக்க கதாபாத்திரத்தைக் கொண்ட புதிய கார்ட்டூன் தொடரொன்றையும் வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இதற்கமையவே, 'பெட்மேன்' கதாபாத்திரத்தை சிருஷ்டித்து கார்ட்டூன் கதாபாத்திரமொன்றை பொபிகேன் உருவாக்கினார்.

மேற்படி, 'பெட்மேன்' கதாபாத்திரத்திற்கான கதையினை பில் ஃபின்ஜர் என்பவரே எழுதினார். இதற்கமைய, 1939 ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவின் 'டிடெக்டிவ் கொமிக்ஸ்' சஞ்சிகையானது முதலாவது 'பெட்மேன்' கார்ட்டூன் தொடரை வெளியிட்டது. இத் தொடரானது வாசகர்கள் மத்தியில் பலத்த அபிமானத்தைப் பெற்றது. அது இன்றுவரையில் தொடரவே செய்கின்றது.

# எங்கும் காணக்கூடிய கொண்டைக்குருவி

கொண்டைக் குருவிகள் இந்தியா, இலங்கை, புருனே, சீனா ஆகிய நாடுகளில் காணக்கூடிய ஒரு பறவையாகும். எனினும், இந்தப் பறவையானது நியூஸிலாந்து மற்றும் அராபிய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப் பட்டதன் பின்னர் அந்த நாடுகளிலும் மிக விரைவாக இவற்றின் பரவல் அதிகரித்துள்ளது.

உலகிலேயே மிக விரைவான இனப் பரம்பலைக் கொண்ட பறவை இனங்களில் கொண்டைக் குருவியானது முதல்நிலை வரிசையில் இடம் பிடித்துள்ளது எனலாம். கொண்டைக் குருவிகள் தமது ஆகாரமாக பழவகைகள், மலர் இதழ்கள், பூச்சி புழுக்கள் ஆகியன வற்றையே உட்கொள்கின்றன. வீட்டுத் தோட்டங்களில் அதிகமாகக் காணப்படுகின்ற கொண்டைக் குருவிகள் வீடுகளுக்குள்ளேயும் கூடுகளைக் கட்டிக்கொள்கின்றன.



'ரெகுவென்டட் புள் புள்' என்று ஆங்கிலத்தில் அடையாளப்படுத்தப்படுகின்ற கொண்டைக் குருவியின் விஞ்ஞானப் பெயர் 'பிக்னோனொட்டஸ் காஃபர்' (*Pycnonotus cafer*) என்பதாகும்.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# புற்றுநோயினால் இறப்போர் தொகை வீழ்ச்சியில்....



அமெரிக்காவில் புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் கடந்த 40 வருடங்களில் அங்கு புற்றுநோயினால் மரணமடைவோரின் எண்ணிக்கை பதினாறு வீதமாக குறைவடைந்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இருப்பினும், கடந்த வருடத்தில் அமெரிக்காவில் மரணமடைவோரின் தொகையில் புற்றுநோயினால் இறப்போர் இரண்டாம் இடத்தில் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

புகைத்தலைக் கைவிடச் செய்வதற்கான பிரச்சாரங்கள் மேற்கொண்டமை மற்றும் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதா? என்பதை அறிந்துகொள்வதற்கான உடல் சோதனைகளை செய்வதற்கு மக்களுக்கு ஆலோசனை வழங்கியமை ஆகிய காரணங்களினால் புற்றுநோயினால் இறப்போரின் தொகையை கணிசமான அளவில் குறைக்க முடிந்துள்ளதாக சுகாதாரத் துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

# தாய்லாந்து யானைக்கு இரட்டைக்குட்டிகள்

தாய்லாந்தின் சூரின் என்ற பிரதேசத்தில் யானையொன்று இரட்டைக்குட்டிகளை ஈன்றுள்ள செய்தி அங்கு பெரிதும் பேசப்படுகின்ற செய்தியாக அமைந்துள்ளது.

35 வயதான பங்க் தொங்குன் என்ற யானையே இவ்வாறு இரட்டைக் குட்டிகளை ஈன்றுள்ளது. இவற்றைப் பார்ப்பதற்காக ஏராளமான மக்கள் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஊடகங்களிலும் இதற்கு பாரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மூன்று மணிநேர வித்தியாசத்தில் ஈனப்பட்ட இந்த இரட்டை யானைக் குட்டிகள், தற்போது ஆரோக்கியமாக இருக்கின்றன. எனினும், இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு யானைகள் இரட்டைக் குட்டிகளை ஈன்றுள்ள போதிலும் அவை நீண்ட காலம் வாழவில்லை என்றும் குறிப்பிடப்படுகின்றது.

தாய்லாந்தின் தேசிய சின்னமாக கருதப்படுகின்ற யானையானது அண்மைக்காலமாக பெருமளவில் அழிவடைந்து வருகின்றன. இதனால்,



தாய்லாந்தில் அருகிவரும் விலங்குகள் பட்டியலில் யானையும் இடம்பெற்றுள்ளது.

நூறு வருடங்களுக்கு முன்னர் ஒரு லட்சமாக இருந்த யானைகளின் எண்ணிக்கை தற்போது நான்காயிரமாக குறைவடைந்துள்ளமையும் குறிப்பித்தக்கது.



# லண்டனில் போக்குவரத்தைத் தடுத்த அன்னப்பறவை

மேற்கு லண்டனின் பிரதான நகரப் பகுதியில் அன்னப்பறவையொன்று வீதியில் நடமாடித்திரிந்தமையால் போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அன்றைய தினம் வேலை நாளாக இருந்தமையால் காரியாலயங்களுக்கு உரிய நேரத்திற்குச் செல்வதற்காக வாகனங்களில் விரைந்து கொண்டிருந்தவர்கள் செய்வதறியாது தடுமாறினர். லண்டனின் புகழ்பெற்ற 'தேம்ஸ்' நதிக்கரைக்கு அண்மையான வீதியிலேயே இந்த சம்பவம் நிகழ்ந்தது.

மேற்படி, அன்னப்பறவையை அந்த இடத்திலிருந்து விரட்டுவதற்கு பொலிஸார் முயற்சித்த பொழுதிலும் அது பலிக்காத நிலையில் அதனை அவ்வாறே சுதந்திரமாகத் திரிய விட்டுவிட்டு குறித்த வீதியை ஒருவழிப்பாதையாக மாற்றி வாகனங்களை ஒருவழியில் மாத்திரமே செல்வதற்கு அனுமதித்தனர்.

அற்லஸ் கேள்வி - 249

**கேள்வி:** இரட்டைக்குட்டிகளை ஈன்ற யானையின் வயது எத்தனை?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 249,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

போட்டி இல - 247 இன் சரியான விடை: இத்தாலி

**பரிசு பெறுவோர்**

அன்னலிங்கம் ரூபிகா,
கல்விளான், சுழிபுரம், சங்கானை,
யாழ்ப்பாணம்.

எஃப்.ஸாபிரா,
37 1/C, உக்குரஸ்ஸபிட்டிய, கட்டுகஸ்தொட்ட.

ஜெ.கிதுர்சிகன்,
36/35 கண்டி வீதி, சுமேதகம, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20/20 உத்தேச அணியில் இடம்பெறாதவருக்கு வாய்ப்பு

## போட்டிகளில் கலந்து கொள்வது சந்தேகமே...



மேற்கிந்திய தீவுகளில் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 20/20 உலகக் கிண்ண போட்டிக்கென தெரிவு செய்யப் பட்டுள்ள இலங்கையின் உத்தேச அணிக்கான பயிற்சிக்ளில் கலந்துகொள்வதற்கு ஜீவந்த குலதுங்கவுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டிருந்த 30 பேரைக்கொண்ட உத்தேச அணியில் ஜீவந்தவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை.

மாகாண மட்டத்திலான 20/20 போட்டிகளில் 'போட்டித் தொடரின் சிறப் பாட்டக்காரராக தெரிவாகியிருந்த ஜீவந்தவுக்கு 20/20 உலகக் கிண்ண உத்தேச அணியில் இடம் வழங்காமை குறித்து பலத்த விமர்சனங்கள் எழுந்திருந்தன. இதனையடுத்தே குறித்த உத்தேச அணியின் பயிற்சிகளில் கலந்து கொள்வதற்கு அவருக்கு வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

எனினும், போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பானது உறுதிப்படுத்தப் படவில்லை. காரணம், ஏற்கனவே இறுதி செய்யப்பட்டிருந்த 30 பேரைக் கொண்ட உத்தேச அணியில் ஜீவந்த இடம்பெற்றிருக்காத நிலையில் அந்தப் பெயர் பட்டியல் ஐ.சி.சி க்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, புதிதாக இணைக்கப்பட்டுள்ள ஜீவந்தவுக்கு ஐ.சி.சி அனுமதி அளிக்குமா என்பது சந்தேகமே.

இருப்பினும், யாராகிலும் ஒரு வீரர் விலகினால் அல்லது உபாதைகளுக்குள்ளாகினால் மாத்திரமே ஜீவந்தவுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## அமெரிக்காவிலும் ஐ.பி.எல் வடிவிலான போட்டிகள்

இந்தியாவில் நடைபெறுகின்ற ஐ.பி.எல் கிரிக்கெட் போன்று அமெரிக்காவிலும் 20/20 போட்டிகளை நடத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அந்நாட்டின் கிரிக்கெட் துறை அதிகாரியான டொனல்ட் லொக்கர்பி தெரிவித்துள்ளார்.

இதற்கான உதவி ஒத்தாசைகளை இந்திய பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) போட்டிகளின் அதிகாரியான லலித் மோடி வழங்கி வருவதாகவும் தெரியவருகின்றது. மேலும், உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் வர்ணனையாளர்கள் சிலரும் இதற்கென வெளிநாட்டு அணிகளின் போட்டியாளர்களை சேர்ப்பதற்குத் தேவையான தமது பங்களிப்பை செலுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் உள்ளூர் கிரிக்கெட் வீரர்களுக்கும் வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்களுக்கும் இந்த போட்டிகளில் உரிய இடம் வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'ஓவர்' போட்டியில் றோயல் வெற்றி



கொழும்பு றோயல் கல்லூரிக்கும் புனித தோமஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற வருடாந்த ஒருநாள் 50 ஓவர் போட்டியில் றோயல் கல்லூரி 133 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிகளில் முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் கல்லூரி 50 ஓவர்களில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 289 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சல்க போகொட 120 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பதிலுக்கு 290 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய புனித தோமஸ் அணி 42.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 156 ஓட்டங்களையே எடுத்தது.

## மகளிர்க்கான ஐ.பி.எல்

உலக அளவில் ஐ.பி.எல் போட்டிகள் பிரபல்யம் பெற்றுள்ளமையால் இதே போன்று மகளிர்க்கான ஐ.பி.எல் போட்டித்தொடரொன்றை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை அங்கீகாரத்தை வழங்கியிருப்பதுடன், அதற்கான பொறுப்பினை லலித் மோடியிடம் ஒப்படைத்துள்ளது. ஏற்கனவே ஐ.பி.எல் போட்டிகளில் பெருமளவு வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளமையினால், ஐ.பி.எல் மகளிர் போட்டித்தொடரையும் நடத்தினால் அதிலும் பெருமளவு நிதியை ஈட்டமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி, உலக நாடுகளின் தேசிய கிரிக்கெட் அணிகளில் இடம் பெற்றுள்ள வீராங்கனைகளுக்கு இதில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப் படும்.

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை விமர்சிக்கின்றார் இம்சமாம் உல்ஹக்



பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் மேற்கொள்ளப் பட்டுள்ள ஒப்பந்தத்தில், மொஹமட் யூசுப், யூனுஸ்கான் ஆகியோர் இடம்பெறாமை குறித்து பாகிஸ்தானின் முன்னாள் வீரர் இம்சமாம் உல்ஹக் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

மொஹமட் யூசுப், யூனுஸ்கான் ஆகிய இரண்டு பேரும் ஆயுற்கால போட்டித் தடைக்கு உள்ளாகாத நிலையில் அவர்களை குறித்த ஒப்பந்தத்தில் சேர்த்துக்கொள்ள முடியாதது ஏன் என்ற கேள்வியை அவர் எழுப்பியுள்ளார்.

வீரர்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தரக்குறைவாக நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவுஸ்திரேலியாவிற்கான விஜயத்தின்போது ஒழுக்கயீனமாக நடந்து கொண்டார்கள் என்று சுட்டிக்காட்டியே இவர்கள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், செய்த தவறு என்ன என்பது குறிப்பிடப்படாததும் சுட்டிக்காட்டத்தக்கது.

ஆனால், அங்கீகாரம் வழங்கப்படாத கபில்தேவின் ஐ.சி.எல் போட்டிகளில் கலந்துகொண்ட அப்துல் ரஸாக், ஊக்கமருந்து பாவித்த மொஹமட் ஆஸிப் ஆகியோர் ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஸ்மித்துக்கு வாய்ப்பு



கைவிரல் காயத்திற்கு உள்ளாகியுள்ள தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணியின் தலைவர் கிரேம் ஸ்மித் ஏப்ரல் மாதம் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள 20/20 உலகக் கிண்ணப்போட்டிகளில் கலந்து கொள்ளக்கூடிய ஏதுநிலை இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெற்று வருகின்ற ஐ.பி.எல் போட்டிகளில் கலந்துகொண்டபோது பந்தொன்றைப் பிடிக்க முயற்சித்தபோது வலது கையின் நடுவிரலில் பந்து பட்டதால் அந்த விரலில் முறிவு ஏற்பட்டிருந்தது. இதனால், அவருக்கு 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டு விடும் என்றே கருதப்பட்டது. எனினும், அவரது கைவிரலைச் சோதித்த மருத்துவர்கள் 'எக்ஸ்ரே' அறிக்கையின் அடிப்படையில் இன்னும் சில வாரங்களில் அவர் வழமைக்குத் திரும்பிவிடுவார் என்று கூறியுள்ளனர். எனவே, 20/20 போட்டிகளில் ஸ்மித் இடம்பெறக்கூடிய சாத்தியம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் தயாரித்த 'ரொக்கெட்'

விண்வெளியை நோக்கி விண்கலங்களை அதிவேகமாக சுமந்து செல்லும் பணியை ரொக்கெட்களே செய்கின்றன. இவற்றை தயாரிப்பதற்கு அதிகளவு செலவாகும். அத்துடன், விண்வெளிப் பயணமொன்றில் ரொக்கெட் ஒன்றை ஈடுபடுத்துவதற்கும் அதிக எரிபொருள் தேவைப்படுகின்றது.


இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு அமெரிக்க பர்டியூ பல்கலைக்கழக மாணவர் குழுவொன்று மாற்று தொழில்நுட்பத்துடனான ரொக்கெட் ஒன்றை வடிவமைத்துள்ளது. அத்துடன், இந்த ரொக்கெட் நீரை எரிபொருளாகக் கொண்டு இயங்கக்கூடியது.

அமெரிக்க பர்டியூ பல்கலைக்கழகம் ஏற்கனவே ...ா நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு பணிகளில் செயல்பட்டு வந்துள்ளது. அந்தவகையில், இப்பல்கலைக்கழகத்தின் 12 மாணவர்கள்கொண்ட குழுவினரே இந்த நவீன ரொக்கெட்டை வடிவமைத்துள்ளனர். இது 9 அடி நீளமுடையது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



குளிர்ந்த நீருடன் அலுமினியத் துகள்களைச் சேர்த்து வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரொக்கெட்டின் ஏவுகையின்போது அதிலுள்ள அலுமினியத்துகள்கள் அதிகமான உந்து சக்தியை வழங்குகின்றது. அத்துடன், எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்ற நீரிலுள்ள ஒக்சிஜன் மற்றும் ஹைட்ரஜன் மூலக்கூறுகள் பிரிந்து எரிபொருளாக உபயோகமாகின்றன. எனவே, இந்த ரொக்கெட் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற குறித்த ரொக்கெட்டின் பரீட்சார்த்த பயணத்தின்போது அது 1300 அடி தூரம் வரை இயங்கி சாதனை புரிந்துள்ளது.





மேற்படி ரொக்கெட் தயாரிப்புக் குழுவின் தலைவரான ஸ்டீவன்சன் என்ற மாணவர் இதுகுறித்து கூறியபோது;

''பொதுவாக ரொக்கெட்களில் ஹைட்ரஜன் செல்களே எரிபொருளாகப் பயன்படுகின்றன. அத்துடன், சாதாரணமாக ரொக்கெட் ஒன்று தயாரிக்க 773 தொன் அமோனியம் பேர்க்ளோரைட் திரவமும் 230 ஹைட்ரோக்ளோரிக் அமிலமும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், எமது குழுவினால் வடிவமைக்கப்பட்ட ரொக்கெட்டை தயாரிப்பதற்கு குறைந்தளவு நீரும் அலுமினிய துகள்களுமே செலவாகின. அத்துடன், இந்த ரொக்கெட் ஏவுகையின்போது ஹைட்ரஜன் வாயு மற்றும் அலுமினியம் ஒக்சைட் வாயுவுமே வெளியிடுவதால், அது சுற்றுச்சூழலுக்கு எந்தவித தீங்கையும் விளைவிக்காது'' என்றார்.

இந்த புதிய கண்டுபிடிப்புத் தொடர்பான அறிக்கையொன்று 'விமானம் மற்றும் விண்வெளியியல் தொடர்பான மாணவர்களின் கண்டுபிடிப்பு' மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, விரைவில் இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரொக்கெட்கள் தயாரிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.








# புளூட்டோ சிவப்பாக மாறுகிறது!

## நாஸா தெரிவிப்பு

புளூட்டோ குறுங்கோளானது அண்மைக்காலத்திலிருந்து பிரகாசமாகவும் சிவப்பாகவும் மாறி வருவதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான 'நாஸா' தெரிவித்துள்ளது. விண்வெளியில் சுற்றி வரும் 'ஹபள்'தொலைக்காட்டி எடுத்த படங்களின் அடிப்படையிலேயே நாஸா இதனைத் தெரிவித்துள்ளது.




புளூட்டோ கிரகத்தில், சூரிய ஒளி படும் துருவத்தின் மேற்பரப்பில் உள்ள பனிக்கட்டி உருகுவதாலும், அதன் எதிர் துருவம் உறைவதாலுமே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாக 'நாஸா' மேலும் கூறியுள்ளது.

புளூட்டோ 1930 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை ஒரு கோளாகக் கருதப்பட்டு வந்தது. பின்னர், இது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆய்வுகளை அடுத்து, புளூட்டோ தனது கோள் என்ற அந்தஸ்தை இழந்து, தற்போதளவில் அது ஒரு குறுங்கோளாகவே அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு 'செரோன்' எனும் பெயரிலான துணைக்கோள் ஒன்றும் உள்ளது.

# செவ்வாயில் பனிப்படலம் உருவாகியதன் காரணம்

செவ்வாய்க் கிரகம் அண்மையிலிருந்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றது. செவ்வாய் தொடர்பான ஆய்வுத்திட்டங்களும் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அதன் ஒரு கட்டமாக அங்கு கடல் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டமை நீங்கள் அறிந்ததே. அதுவே தற்போதளவில் அங்கு பல்வேறு ஆய்வுகளை முன்னெடுக்க விஞ்ஞானிகளின் ஆவலைத் தூண்டியும் உள்ளது.

அந்தவகையில், பல்வேறு நாடுகளும் செவ்வாய் குறித்த ஆய்வுத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றன. அதன்படி, இங்கிலாந்து நாட்டின் விஞ்ஞானிகள் அண்மையில் நடத்திய ஆய்வு முடிவுகள் புவியியல் விஞ்ஞானம் தொடர்பான சஞ்சிகை ஒன்றில் வெளியாகி இருக்கின்றன. அதில் கூறப்பட்டுள்ள சில முக்கியமான விடயங்கள் வருமாறு;

* செவ்வாயில் தற்போது நிலவும் ஈரப்பதம் மற்றும் குளிர்ந்த சூழலானது பூமியில் நிலவும் பனிக்காலம் போன்ற சூழலைக்கொண்டது.
* செவ்வாயின் மத்திய ரேகைக்கு அருகில் 20 கிலோமீற்றர் அகலமுள்ள ஏரியொன்று இருந்துள்ளது. 3 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாயில் இருந்த பனிப்பாறைகள் உருகியே இந்த ஏரி உருவாகி இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
* இந்த ஏரியின் ஆயுளை வைத்துப் பார்க்கும்போது, செவ்வாயில் தற்போது நிலவும் பருவமாற்றம், ஏற்கனவே கணிக்கப்பட்ட காலத்துக்கு பிறகே நிகழ்ந்திருக்க வேண்டும். அதாவது, 3.8 முதல் 4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் செவ்வாய் இத்தகைய மாற்றங்களை அடைந்திருக்கும் என்றும் கருதப்படுகின்றது.



இங்கிலாந்தின் இம்பீரியல் கல்லூரி மற்றும் நாஸாவின் செவ்வாய் ஆய்வுக்குழு என்பன இணைந்தே இந்த ஆய்வை நடத்தியுள்ளன. ஆய்வுக்குழுவின் தலைவரான இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த நிக்கலஸ் வோர்னர் இது பற்றி கூறும்போது, ''செவ்வாயின் தற்போதைய பருவகாலம் முக்கியமாக கவனிக்கப்பட்டு வருகின்றது. இதுதான் செவ்வாயில் பனிப்படலம் உருவாகியிருப்பதற்கான காரணமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. இது தொடர்பிலான எங்கள் ஆய்வு முடிவு செவ்வாய் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாக இருக்கும்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.04.07 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 254
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## பொருத்தமான பாகங்களை ஒட்டி படத்தைப் பூர்த்தி செய்க

1





## நிறங்களுடன் பொருந்தும் படத்துடன் இணைக்க

2

Purple

Yellow

Orange

Red

Green



## அறிவுக்கு விருந்து 251 விடைகள்

**போட்டி: 03**




**போட்டி: 04**

1. பூட்டான்
2. இஸ்ரேல்
3. லெபனான்
4. துருக்கி

**போட்டி: 05**

(1) 97, 118, 342, 786
(2) 1/4, 1/2, 3/4, 1
(3) XXIX, XXXIII, L, MM

### அற்லஸ் அறிவுக்கு விருந்து 251 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஏ.பிரியதர்ஷன்,
தரம் - 1D, இந்துக் கல்.,
கொழும்பு-04.

**போட்டி: 02**
ப.சுஜிர்தா,
தரம் - 3, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்.,
யாழ்ப்பாணம்.

**போட்டி: 03**
எம்.எச்.அப்கர்,
தரம் - 7B, இல்மா ம.கல்.,
மாத்தறை.

**போட்டி: 04**
எம்.எம்.பாரிக்,
தரம் - 9B, அல்-அதான் ம.வித்.,
பதுளை.


**போட்டி: 05**
ஏ.முஹம்மத்,
தரம் - 6,அநு/நிதிகம மு.வித்.,
நிதிகம.

### பாராட்டுப் பெறுவோர்:

- எம்.ஐ.எம்.நஸ்ஹான், தரம்-7B, ப/அல்-முர்ஷித் ம.வித்., சில்மியாபுர.
- ஏ.ரோஷன் அலி, தரம்-10, நிதிகம மு.வித்., நிதிகம.
- எஃப்.சஸ்னா, தரம்-9, இனிகல மு.வித்., இனிகல.
- யே.கமிசன், குருநகர், யாழ்ப்பாணம்.
- ஏ.என்.ஹாலித், தரம்-2, கஹடகஸ்திகிலிய மு.ம.வித்., கஹடகஸ்திகிலிய.
- ஏ.ஆர்.எம்.ஷாமில், நிமால் வீதி, கொழும்பு-04.
- பு.டிறோஷியா, கோட்டைக்கல்லாறு, மட்டக்களப்பு.
- ஆர்.உகந்தி, அலகொலங்க, வளவெல.
- ஜே.செல்வபிரேம், மாளிகாவத்தை, கொழும்பு-10.
- எம்.என்.எஃப்.நிஸ்ரா, கே/அல்-ஷஃபா ம.வித்., பொல்கொல்ல.

## எத்தனை உள்ளன?

3



## குழம்பியுள்ள பழமொழிகளை ஒழுங்குபடுத்தி எழுதுக

5

- ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல்
- காவடிப் பாரம்
- கண்ணுக்குத் தெரியாது
- செய்கிறவனுக்குத் தலைச்சுமை
- முழங்கை நீளும்
- சுமக்கிறவனுக்குத் தெரியும்
- இமைக்குற்றம்
- முன்கை நீண்டால்

1. ........................................
2. ........................................
3. ........................................
4. ........................................

## போக்குவரத்து சாதனங்களில் வட்டமிடுக

4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிகைக் காலத்தில் பட்டாசுகள் கொளுத்துவதற்கு சிறுவர்களாகிய நீங்கள் ஆர்வம் கொண்டிருக்கக்கூடும். இந்த செயல்பாடுகளில் ஆபத்துக்கள் இருப்பது பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? முதலில் உங்கள் பாதுகாப்பே முக்கியமானது. சிறு கவனக் குறைவினாலும் உங்களுக்கு மிகப்பெரிய பாதிப்புகள் ஏற்படலாம்.**

# இது பண்டிகைக் காலம் அவதானமாக இருங்கள்!



## விபத்துக்கள்

சாதாரண காலத்தைவிட பண்டிகைக் காலங்களில் விபத்துக்கள் அதிகமாக நிகழ்வதுண்டு. அன்றாட வாழ்க்கைப் பணிகளில் இருந்து நாம் விடுபட்டு செயற்படுவதே இதற்குரிய காரணமாகும். பாடசாலை விடுமுறை, தொழில் ரீதியான விடுமுறைகளோடு பண்டிகைகள் கொண்டாட்டங்கள் களை கட்டுவதனால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

பண்டிகைக் காலமாதலால் தெருக்களில் பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்லும் மற்றும் சுற்றுலாச் செல்லும் மக்களால் வீதி விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

இக்காலப்பகுதியில் நடத்தப்படும் விருந்துகள் மற்றும் விழாக்களாலும் பலவிதமான விபத்துக்கள், இம்சையான செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. பண்டிகைக்கு தயாராவதால் ஏற்படும் அவசர நிலைமைகளாலும் வீடுகளில் விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

அந்தவகையில், பட்டாசு, வெடி விபத்துக்களும் இக்காலப்பகுதியில் அதிகரிக்கின்றன. கடந்த ஆண்டுகளில் இவ்விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்தபோதிலும் இது குறித்து தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுவது முக்கியமான விடயமாகும்.

## பட்டாசுகள்

பட்டாசு வெடி விபத்துக்கள் பற்றி கடந்த ஆண்டு ஒருசில சம்பவங்களே அறியப்பட்டன. இது ஓரளவு நல்ல நிலைமையாயினும் டிசம்பர் 31 ஆம் திகதி 27 சம்பவங்கள் அறியப்பட்டன. இவ்விபத்துக்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதனால் இதுபற்றி நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டியது அவசியமாகிறது. 2000 ஆம் ஆண்டு புத்தாண்டுப் பிறப்பின்போது பட்டாசை வெடித்த மாணவன் ஒருவன் விபத்துக்குள்ளாகி மரணமடைந்ததை மறந்திருக்க மாட்டீர்கள். குடும்பத்தின் ஒரே ஆண் வாரிசான அவனுக்கு இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. எனவே, பட்டாசு வெடித்தல் சிறு பிள்ளைகளுக்கு உகந்த செயற்பாடுகள் அல்ல. எனினும், வயது வந்தவர்களின் கண்காணிப்புடன் பட்டாசுகளை வெடிக்க வைத்தல் ஓரளவு நன்மையானது.

அத்துடன், பட்டசுகளை விரலில் பிடித்துப் பற்ற வைப்பது ஆபத்தான செயற்பாடாகும். இதனால், விரல்களை இழக்கவும் நேரிடலாம் அல்லது கையில் தீக்காயம் ஏற்பட்டு கையை அசைக்க முடியாத நிலைமை ஏற்படலாம்.

மத்தாப்புக்களின் தீப்பொறி சிறு பிள்ளைகளின் கண்களில் படுவதால் கண் பார்வையை இழக்கும் நிலை ஏற்படலாம். மத்தாப்புக்களைப் பயன்படுத்திவிட்டு அவற்றின் கம்பிகளை அலட்சியமாக வீசியெறிவதால் பிறருக்கும் ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. உயரமான கட்டடங்களில் இருந்து கொண்டு மாத்தாப்பை பற்ற வைத்தல், வீடுகள், வாகனங்களுக்குள் அவற்றை வீசுதல் என்பன தவிர்க்கப்படவேண்டியவையாகும்.

பட்டாசுகள் மற்றும் இவ்வாறான மத்தாப்புக்களைப் பயன்படுத்துவதில் சிறுபிள்ளைகள் பல தவறுகளைச் செய்கின்றனர். எஞ்சிய பட்டாசுகளை சேகரித்து அதிலுள்ள வெடி மருந்துகளைப் பயன்படுத்தி பற்றவைக்க முனைகின்றனர். இதனாலும் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பட்டாசுகளையும் இதர வெடிபொருட்களையும் பயன்படுத்துவதில் அவற்றின் தரம் தொடர்பிலும்கூடிய அவதானம் செலுத்தப்படவேண்டும். பெக்கட்டில் 100 பட்டாசுகளே இருக்கவேண்டும்.

அதிக சக்தி கொண்ட பட்டாசுகள் மிகவும் ஆபத்தானவை. இது குறித்தும் அவதானம் செலுத்தப்படவேண்டும். சந்தைகளில் விற்கப்படும் பட்டாசுகள் குறித்தும் அதிக அவதானம் செலுத்தப்படவேண்டும். பட்டாசுக்கடைகளுக்கு அருகாமையில் வைத்து பட்டாசுகளை வெடிக்க வைக்கக்கூடாது.

இவ்வாறான செயல்பாடுகளால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்ப்பது அவசியமாகும். எரிகாயங்களின்போது அரை மணித்தியாலம் வரை குறித்த பகுதி தண்ணீரால் கழுவப்படவேண்டும். அதன்பின் விரைவாக வைத்தியசாலைக்கு செல்லவேண்டும். அதிக இரத்தப்போக்கு எனின், அதன்மீது அழுத்தத்தினை வைத்து இரத்தப்போக்கினைக் கட்டுப்படுத்தி வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவேண்டும்.

## வேறு விபத்துக்கள்



பட்டாசு விபத்துக்கள் மட்டுமன்றி வீடுகளிலும் விளையாட்டுக்களில் ஈடுபடும்போது சிறு பிள்ளைகள் விபத்துக்களை எதிர்கொள்கின்றனர். பிள்ளைகள் தங்கள் வயதுக்கு ஏற்ற விளையாட்டுக்களிலேயே ஈடுபட வேண்டும். மண்பானை உடைத்தல், வழுக்கு மரத்தில் ஏறுதல் ஆகிய விளையாட்டுக்களில் ஈடுபட்டு விபத்துக்களை எதிர்நோக்குகின்றனர். ஒரு தடவை மண்பானை உடைக்கும் போட்டியைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பிள்ளைக்கு பானை உடைக்கும் தடிபட்டு மூன்று பற்கள் உடைந்துவிட்டதை அறிவீர்கள். இவ்வாறான விபத்துக்களின்போது உடைந்த பற்களை எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்கு செல்லவேண்டியது அவசியமாகும்.

இப்படியான நிலைமைகளின்போது, பற்களைக் கழுவினாலும் பற்களின் வேர்களைக் கழுவக்கூடாது. வேரின் உயிர்ப்புத் தன்மை போய்விட்டால் பற்களைப் பொருத்திக்கொள்ளமுடியாது. உடைந்த பற்களை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும்போது, தாய்ப்பால், சேலைன் அல்லது சுத்திகரிக்கப்பட்ட பால் இவற்றில் ஏதாவது ஒன்றில் அமிழ்த்தி வைத்தே எடுத்துச் செல்லப்படல்வேண்டும்.

வீதியில் இடம்பெறும் சைக்கிள் பந்தயங்கள், ஓட்டப்பந்தயங்கள் என்பவற்றில் கலந்துகொள்ளும் வீரர்களின்-பார்வையாளர்களின் பாதுகாப்பு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன், வீடுகளில் பெரும்பாலும் சிறுபிள்ளைகள் விபத்துக்களை எதிர்கொள்கின்றனர். பண்டிகைக் காலங்களில் சிற்றுண்டிகள் செய்யப் பயன்படும் எண்ணெய் பாத்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படாமையால் சிறு பிள்ளைகள் அதனால் விபத்துக்குள்ளான சந்தர்ப்பங்களும் உள்ளன. அதனால், பிறக்கும் தமிழ், சிங்களப் புத்தாண்டு விபத்துக்கள் அற்ற புதிய ஆண்டாக மலரக் கவனம் கொள்வோம்!

(இ)

**அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வரவிருக்கும் தமிழ், சிங்கள புதுவருட பண்டிகையை தம்பி, தங்கைகள் மற்றும் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகையில் பட்டாசு, வெடி வகைகளால் அனர்த்தங்கள் ஏற்படலாம் அவ்வாறு ஏற்படாமல் தவிர்த்துக்கொள்ள எச்சரிக்கையாக இருக்கும் வகையில் உங்களுக்கு அறிவூட்டுவதற்காக இக்கட்டுரை முன்கூட்டியே வெளிவருகிறது**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கூகுல் நகரம் எங்குள்ளது தெரியுமா?





'கூகுல்' நகரம் எங்குள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா? இணையத்திலுள்ள 'கூகுல்' பற்றித் தெரியும். ஆனால், கூகுல் நகரத்தைப்



பற்றித் தெரியாது என்பீர்கள். ஆனால், உண்மையில் அமெரிக்காவின் கன்ஸாஸ் பிராந்தியத்தின் ஒரு நகரத்திற்கே 'கூகுல்' நகரம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த நகரம் 'டொபேக்கா' நகரம் என்றே இதுவரை அழைக்கப்பட்டு வந்தது. எனினும், இணைய 'கூகுல்' நிறுவனத்தின் தேவையின் நிமித்தமாகவே இந்த நகரத்தின் பெயர் 'கூகுல் கன்ஸாஸ்' என்று மாற்றப்பட்டது.



அதாவது, கூகுல் நிறுவனம் புதிதாக புரோட்பேன்ட் இன்டர்நெட் வலைப்பின்னலொன்றை (பரந்த விரைவுமிக்க இணைய சேவை) அறிமுகம் செய்ய இருப்பதாக அறிவித்திருந்தது. இது தற்போதைய இணைய சேவையைவிட 100 மடங்கு வேகம் கூடியது என்று 'கூகுல்' நிறுவனம் குறிப்பிடுகின்றது. தற்போது பரீட்சார்த்த அளவில் இந்த நடவடிக்கை உள்ளமையால் அமெரிக்காவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் மாத்திரம் ஆரம்பகட்டமாக இந்த பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கமையவே, கென்ஸாஸ் மாநிலத்திலுள்ள டொபேக்கா என்ற நகரத்திற்கு 'கூகுல்' என்று பெயரிட்டு, குறித்த நகரப்பகுதி மக்கள் மத்தியில் மாத்திரம் இந்த புதிய விரைவுமிக்க இணைய சேவையின் பரீட்சார்த்த சேவை நடைபெற்று வருகின்றது. எனவே, இந்த நகரத்தில் வசிக்கின்ற மக்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தையிட்டு 'கூகுல்' மீதான அவர்களின் அபிமானமும் அதிகரித்துள்ளது.

உலகிலுள்ள ஏனைய மக்களுக்கு முன்னதாக குறித்த புதிய விரைவுமிக்க இணைய சேவையினைப் பயன்படுத்துவது அவர்களுக்குப் புதியதோர் அனுபவமாகவே அமைந்துள்ளது. எப்படியிருப்பினும், இந்த பரீட்சார்த்த நடவடிக்கைகளை விரைவாக முடித்துக்கொண்டு கூடிய விரைவில் அனைத்து மக்களும் இதனை அனுபவிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே தமது இலக்கு என்றும் 'கூகுல்' நிறுவனம் தெரிவித்துள்ளது.



# முட்டை ஸ்பீக்கர்

கைத்தொலைபேசிப் பாவனையாளர்களுக்கென பிரத்தியேகமாக முட்டை வடிவில் தயாரிக்கப்பட்டுள்ள சிறிய அளவிலான 'ஸ்பீக்கர்' ஒன்றை 'எஸ் என்ட்ஜே' என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. முட்டை வடிவிலான இந்த ஸ்பீக்கருக்கு 'EGGY' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதற்கென 20 மி.மீற்றர் மைக்ரோ மினி டிரைவர்ஸ் பயன்படுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

இதனால், 20 வோல்ட் அளவிலான ஒலியை இந்த ஸ்பீக்கர் வெளிப்படுத்துவதுடன், டிஜிட்டல் எம்பளிஃபயர் இதில் பொருத்தப்பட்டுள்ளதால் மிகவும் துல்லியமான ஒலிநயத்தையும் பெறமுடிகின்றது. இதனைப் பயன்படுத்தும்போது முட்டையை இரண்டாகப் பிரித்தால் எந்த வடிவில் இருக்குமோ அதேபோல் இரண்டு பாதியாகக் காணப்படும். பாவனை முடிந்ததும் அதனைப் பழையபடி ஒன்றுடன் ஒன்று சேர்த்து மூடிவிடமுடியும். அப்போது அது பழைய படி முழுமையான முட்டை வடிவினைப் பெற்றுவிடும்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, மார்ச் மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 31, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org